Registered as a News paper in Sri Lanka

பக்கங்கள்: 06

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி

நாதம் 01 | பிரமோதூத ஸ்ரீ சித்திரை மீ 30 ஆம் உ | ஞாயிற்றுக்கிழமை | (13 - 05 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷவ்வா 17 | ஓசை 84

## ஜே.வி.பி. பெண் பொலிசாருக்குடிமிக்கி

(கண்டி)

ஜனதா விமுக்திப் பெரமுனையைச் (ஜே.வி.பி.) சேர்ந்த பெண் ஒருவர் கண்டிப் பொலிஸ் நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் காலைதப்பி ஓடியுள்ளார்.

தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் மத்திய மாகாண நாசவேலைகள் தடுப்புப்பிரிவால் இப்பெண் கண்டிப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இவர் ஆண்வேடம் தரித்துத் தப்பியோடியுள்ளார் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

18 வயதினரான இப்பெண் அறையின் இரும்புக்கம்பி ஒன்றைக் கழற்றி அதன் வழியாக வெளியேறி முள்ளுக்கம்பி வேலிக்கூடாக நுழைந்து தப்பிச் சென்றுள்ளார். கழிவறைக்குள் சென்று கூரிய பிளேட்டினால் தன் கூந்தலையும் ஆண்களைப்போல் சிரைத்துள்ளாராம்.

''இந்நிகழ்ச்சி பொலிஸ் அதிகாரிகளுக்கு பெரும் அவமானம்'' என்றார் ஒரு உயர் பொலிஸ் அதிகாரி. உள்ளாளும் கையாளும் இல்லாமல் பெண் தப்பிச் சென்றிருக்க முடியாதென்று கண்டியில் பரவலாகப் பேசிக் கொள்ளப்படுகிறது.

# ஆளுநர் தமிழராகவும் அரச அதிபர் முஸ்லிமாகவும் வரக்கூடாதா?

## சூடடிக்கும் தளம்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு, ஒலுமடு துணுக்காய், முத்தையன்கட்டு ஆகிய இடங்களில் முல்லை மாவட்டக் கமத்தொழில் சேவைகள் திணைக்களத்தினால் சூடடிக்கும் தளம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நடமாட்டம் இராமேஸ்வரத்தில் இல்லை!

(சென்னை)

இராமேஸ்வரத்திலுள்ள சாம்பன், தங்கச்சிமடம் ஆகிய பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் நடமாட்டம் இருப்பது எனக் கூறுவது தவறு என இங்குள்ள மத்திய மாநில அரச அதிகாரிகள் பொது மன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளார் என ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இலங்கை மீனவர்களது மீன்பிடி வள்ளங்களைத் திருடிய மீனவர்களைத் தான் தமிழீழ விடுதலைப் புலிகள் கைது செய்தார்கள். மற்றவர்களை அவர்கள் துன்புறுத்தவில்லை என உள்ளூர் மீனவர்களிடம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## உண்மையான சமாதானத்தை விரும்பினால் இதை செய்யலாமே!

### திருமலை தேனிசை நிகழ்ச்சியில் யோகி

(திருக்கோணமலை)

''உண்மையான சமாதானத்தை அரசாங்கம் விரும்புமாக இருந்தால் வடக்கு கிழக்குமாகாண ஆளுநராக ஒரு தமிழரை ஏன் நியமிக்கக்கூடாது? திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக ஒரு தமிழரை அல்லது ஒரு முஸ்லிமை ஏன் நியமிக்கக்கூடாது? அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபராக ஒரு தமிழரை அல்லது ஒரு இஸ்லாமியரை ஏன் நியமிக்க முன் வரக்கூடாது.?''

திருக்கோணமலையில்நேற்று மாலை நடைபெற்ற தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரெத்தினம் யோகி பேசுகையில் மேற்கண்ட கேள்விகளை எழுப்பினார்.

குச்சவெளியில் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. றூபன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

மேலும் பேசுகையில் இலங்கை அரசாங்கம் இராணுவத்தை இன்னும் பலப்படுத்த வேண்டிய அவசியம் என்ன? இந்தியாவுடன் போர் புரியப் போகிறதா? ''இந் நிலையில் உண்மையான சமாதானத்தை அரசு விரும்புமானால் இரா

(6ஆம் பக்கம் பார்க்க)

### உழவுயந்திர விபத்து

## மல்லாவியில் தேனிசைச் செல்லப்பா

(வவுனியா)

தேனிசை செல்லப்பா வின் இசை நிகழ்ச்சி நாளை பதினான்காம் திகதி திங்கட்கிழமை மல்லாவியில் நடைபெற உள்ளது.

மறுநாள் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியிலும் புதன்கிழமை பதினாறாம் திகதி ஓமந்தையிலும் மேற்படி இசை நிகழ்ச்சி நடைபெற இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

செல்லப்பாவுடன், பாடகி சொர்ணலதாவும் இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார். (தி)



செல்வி ஜாக்குலின்

## திருமண வீட்டிற்கு வந்த திருடர் தப்பி ஓடிவிட்டனர்

(விசேட நிருபர்)

திருட்டுக்குமோட்டார்சைக்கிளில் வந்தவர்கள் திருடிய பொருட்களுடன் தமதுமோட்டார் சைக்கிளையும்கைவிட்டு ஓடிய சம்பவம் சமீபத்தில் குருநகரில் நடைபெற்றது.

திருமண வைபவம் நடைபெறுவதற்காக அலங்கரிக்கப்பட்ட பந்தலில் வைக்கப்பட்டிருந்த ரி.வி.டெக்கைஆள்அரவமற்ற அதிகாலைப் பொழுதில் திருடியவர்கள் அவ்விடத்தை விட்டு அகல்வதற்கு முன்பாக வீட்டுக்காரர்கள் விழித்துக் கொண்டனர்.

''கள்ளன் கள்ளன்'' என்ற குரலைக் கேட்டுத் திருடர்கள் வந்த மோட்டார் சைக்கிளையும் திருடிய பொருட்களையும் கைவிட்டு ஓடியதாகக் கூறப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. மாவட்ட கல்வித் திணைக்களத்தின் பதவி நிலை மாற்றங்கள்

(காத்தான்குடி)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சுச் செயலாளர் விடுத்துள்ள பணிப்

மட்டக்களப்பு மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் சகல திணைக்களங்களினதும் தலைவர்களுக்கு அனுப்பி வைத்

## ''எமது மக்களுக்கு செய்த சேவையை ஒருபோதும் மறக்க மாட்டோம்''

- டாக்டர் கதிரவேற்பிள்ளை

(பருத்தித்துறை)

பணியாற்றி விட்டு, தாய்நாடு


''உண்மையான சமாதானத்தை அரசாங்கம் விரும்புமாக இருந்தால் வடக்கு கிழக்குமாகாண ஆளுநராக ஒரு தமிழரை ஏன் நியமிக்கக்கூடாது? திருக்கோண மலை மாவட்ட அரசாங்க அதிபராக ஒரு தமிழரை அல்லது ஒரு முஸ்லிமை ஏன் நியமிக்கக்கூடாது? அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபராக ஒரு தமிழரை அல்லது ஒரு இஸ்லாமியரை ஏன் நியமிக்க முன் வரக்கூடாது.?''

திருக்கோணமலையில்நேற்று மாலை நடைபெற்ற தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரெத்தினம் யோகி பேசுகையில் மேற்கண்ட கேள்விகளை எழுப்பினார்.

குச்சவெளியில் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. றூபன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

மேலும் பேசுகையில் இலங்கை அரசாங்கம் இராணுவத்தை இன்னும் பலப்படுத்த வேண்டிய அவசியம் என்ன? இந்தியாவுடன் போர் புரியப் போகிறதா? ''இந் நிலையில் உண்மையான சமாதானத்தை அரசு விரும்புமானால் இரா

(6ஆம் பக்கம் பார்க்க)



மைபதினாறாம் திகதி ஓமந்தையிலும் மேற்படி இசை நிகழ்ச்சி நடைபெற இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. செல்லப்பாவுடன், பாடகி சொர்ணலதாவும் இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார். (தி)

திருட்டுக்குமோட்டார்சைக்கிளில் வந்தவர்கள் திருடிய பொருட்களுடன் தமதுமோட்டார் சைக்கிளையும்கைவிட்டு ஓடிய சம்பவம் சமீபத்தில் குருநகரில் நடைபெற்றது.

திருமண வைபவம் நடைபெறுவதற்காக அலங்கரிக்கப்பட்ட பந்தலில் வைக்கப்பட்டிருந்த ரி.வி.டெக்கைஆள்அரவ

திருடியவர்கள் அவ்விடத்தை விட்டு அகல்வதற்கு முன்பாக வீட்டுக்காரர்கள் விழித்துக் கொண்டனர்.

''கள்ளன் கள்ளன்'' என்ற குரலைக் கேட்டுத் திருடர்கள் வந்த மோட்டார் சைக்கிளையும் திருடிய பொருட்களையும் கைவிட்டு ஓடியதாகக் கூறப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. மாவட்ட

## கல்வித் திணைக்களத்தின் பதவி நிலை மாற்றங்கள்

(காத்தான்குடி)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சுச் செயலாளர் விடுத்துள்ள பணிப்பின் பிரகாரம் கல்வித்திணைக்கள ரீதியிலான பதவிநிலை மாற்றங்கள் உடனடியாக அமுல் செய்யப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் சகல திணைக்களங்களினதும் தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் பிரதிக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## உழவுயந்திர விபத்து

(மட்டக்களப்பு)

உழவுயந்திரத்தில் ஏற்றிக் கொண்டு வந்த மரம் இறக்கும் போதுசறுக்கி விழுந்தமையால் வாலிபரொருவர்பலியானார்.

இச்சம்பவம் அண்மையில் வாழைச்சேனையில் நடைபெற்றது

இறந்தவர் யூனியன் கொலனிவாசி கா. தவராசா (30) என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செல்வி ஜாக்குலின்

# ''எமது மக்களுக்கு செய்த சேவையை ஒருபோதும் மறக்க மாட்டோம்''

- டாக்டர் கதிரவேற்பிள்ளை

(பருத்தித்துறை)

''வடமராட்சிப் பகுதியிலே இந்திய இராணுவத்தின் கெடுபிடிகள் வன்செயல்கள் தலைவிரித்தாடிய காலத்தில் இப்பகுதி மக்களுக்கு உயிர்காக்கும் சேவையான அரும்பெரும் வைத்திய சேவைகளை வழங்கியமையை மக்கள் மறந்து விட மாட்டார்கள்'' என அண்மையில் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் பணியாற்றி விட்டு, தாய்நாடு திரும்பவுள்ள பிரான்ஸ் வைத்திய சேவைக்குழு இணைப்பதிகாரி, மருத்துவதாதி செல்வி. ஜாக்குலினின் சேவையைப் பாராட்டிநடாத்தப்பட்ட சேவை நலன் பாராட்டு விழாவில் தலைமை வகித்துப் பேசிய மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை தெரிவித்தார். இச் சேவை நலன் பாராட்டு விழாவை பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை ஊழியர் நலன்புரிச் சங்கம் ஒழுங்கு செய்திருந்தது.

இவ் விழாவில் தலைமை வகித்துப் பேசிய வைத்திய அதிகாரி மேலும் பேசுகையில் இந்திய இராணுவத்தினர் மிருகத்தனமாக வீதிவீதியாக மக்களைச் சுட்டுப் போட்ட நேரத்தில் எவரும் வெளியே வரப்பயந்திருந்தபோது, துணிவுடன் வீதியில் சென்று இறந்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் வங்கி வெளி நாடுகளில் வேலை பெறுவோருக்கு உதவி

(கொழும்பு)

வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் இலங்கையர்களுக்கு மக்கள் வங்கி பல உதவிகளைச் செய்து கொடுக்கும் என பிரதமரும் நிதியமைச்சருமான டீ. பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு செல்லும் வறிய மக்களுக்கு இவ்வாறு உதவிகள் வழங்கப்படவுள்ளது.

ஜனாதிபதி பிரேமதாசாவின் யோசனைக்கு அமைய அமைக்கப்பட்டுள்ள இந்த வேலை வாய்ப்பு உதவி நிலையத்தில் மக்கள் வங்கி வைபவம் ஒன்றில் பிரதமர் உரை நிகழ்த்தினார்.

இதுவரை ஆயிரம் பேர் இவ்வாறு நிதியுதவி பெற்று வெளிநாடு சென்றுள்ளதாகவும் பிரதமர் இங்கு கூறினார்.

## சாரதி அனுமதிப் பத்திரங்களில் பாரிய மோசடி

(கொழும்பு)

போலியான சாரதி அனுமதிப் பத்திரங்கள் பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. கொழும்பில் புதிய முறையிலான சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படத் தொடங்கியதை அடுத்தே ஏமாற்றும் நபர்களால் வழங்கப்பட்டதாகக் கருதப்படும் போலியான சாரதி அனுமதிப் பத்திரங்கள் சிக்கியுள்ளன.

(6ஆம் பக்கம் பார்க்க)

## சகல காணி உறுதிகளும் பதிவு செய்யப்படும்

(சுதுமலை)

கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த சகல பகுதிகளிலும் இன்றுவரை எழுதப்பட்ட சகல காணி உறுதிகளும் பதிவு செய்வதற்காக கிளிநொச்சி மாவட்ட மேலதிக பதிவுக் காரியாலயத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

சகல பிரசித்த நொத்தாரிசுகளும் சட்டத்தரணிகளும் தம் கைவசம் பதிவுக்காக வைத்திருக்கும் சகல மூலப் பிரதிகளையும் இணைப்பிரதிகளையும் கிளிநொச்சி காணி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு மாவட்ட மேலதிகப் பதிவாளர் திரு. ந. சதாசிவ ஐயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஆலயத்தில் இரவு திருட்டு

(ஈச்சமோட்டை

கோண்டாவில் கிழக்கு நாக பூஷணி அம்மன் ஆலயத்தில் முன் உள்ள உண்டியலை உடைத்து அதில் இருந்த பணத்தையும், அம்மனைக் கிளட்பி கீழ் இருந்த இயந்திரத் தகடையும் திருடர்கள் களவாடி சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை இரவு இடம் பெற்றது. (43)

## ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கக்கோரி மறியல்

(வவுனியா)

வவுனியா தமிழ் மகாவித்தியாலய மாணவர்கள் நாளை திங்கட்கிழமை (14-05-90)மறியல் போராட்டம் ஒன்றை நடாத்த உள்ளனர்.

மேற்படி பாடசாலை ஆசிரியர் பற்றாக் குறையை நீக்குமாறும் நிரந்தர அதிபர் ஒருவரை நியமிக்கும்படி வேண்டியும் மாணவர்கள் தங்கும் விடுதியை ஒழுங்கு செய்து தரும்படி கோரியும் கல்வித் திணைக்களத்திற்கு எதிரில் இம் மறியல் போராட்டம் நடைபெற இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது

கல்வித் திணைக்களம் மேற்படி கோரிக்கைகளை

(6ஆம் பக்கம் பார்க்க)

## டிப்போவுக்கு தொலைபேசி துண்டிப்பு

(மட்டக்களப்பு)

தொலைபேசி கட்டணமாக செலுத்தப்பட்ட காசோலை வங்கியில் பணம் இன்றி திரும்பியதனால் மட்டக்களப்பு இ. போ. ச. சாலைக்கு வழங்கப்பட்ட தொலைபேசி இணைப்பு மீண்டும் துண்டிக்கப்பட்டது.

## பிரேமாவின் திட்டங்களுக்கு ஜே. வி. பி. ஆதரவாம்

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் அமைதி நிலையை ஏற்படுத்த ஜனாதிபதி பிரேமதாஸ எடுக்கும் முயற்சிகளுக்கு ஜே. வி. பி. இயக்க தலைவர்களில் ஒருவர் ஆதரவு வழங்கியுள்ளதாக பொது நிர்வாக மாகாணசபைகள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா கூறினார்.

இவரை அண்மையில் தாம் சந்தித்ததாகவும், ஜே. வி. பி இயக்கம் இதற்கு முழு ஆதரவு வழங்குவதாக அவர் தெரிவித்ததாகவும் அமைச்சர் சொன்னார்.

## வகுப்பு ஆண்டு ஒன்றிற்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது

(கொழும்பு)

1991 ஆம் ஆண்டு பாடசாலைகளில் ஆண்டு ஒன்று வகுப்புகளுக்கு அனுமதிப்பதற்கு கல்வி அமைச்சு பெற்றோரிடமிருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது.

1986 ஜனவரி 31க்கு முன்னர் பிறந்த ஐந்து வயது பூர்த்தியான பிள்ளைகளே இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவங்கள்கல்வியமைச்சு ''பாடசாலைகள் அனுமதி'' என்ற 1984/4சுற்றறிக்கைக்கு ஏற்ப பெற்றோர் அல்லது பாதுகாவலர் நிரப்பி அனுப்ப வேண்டும்.

நிரந்தர வதிவிடத்துக்கு அருகில் உள்ள பாடசாலை அதிபர்களுக்கு 1990 மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

## விசர்நாய் கடித்து சிறுமி மாணம்

(வவுனியா

விசர் நாய் கடித்து எட்டு வயது சிறுமி பலியானார். இச்சம்பவம் வவுனியா நெளுக்குளம் பகுதியில் நிகழ்ந்தது.

சுமார் மூன்றுமாதங்களுக்கு முன்னர் மேற்படி சிறுமியை விசர் நாய் கடித்தது. ஒழுங்காகத் தடுப்பூசி போட்டு வராத காரணத்தினால் சிறுமி பலியாக நேர்ந்ததாக தெரிவிக்கப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மத்திய பஸ் தரிப்பிடத்திற்கு புதிய அலுவலகக் கட்டிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய போக்குவரத்துச்சபை பஸ் தரிப்பிட அலுவலகம் புனரமைப்புசெய்யப்பட உள்ளதால் அதனோடு அண்டியுள்ள நடைபாதை வியாபாரிகள் இடமாற்றம் செய்யப்பட உள்ளனர்.

போக்குவரத்துச் சபை அலுவலகம் மூன்றுமாடிக் கட்டிடமாக அமையும் எனவும் இதில் கீழ் கட்டிடத்தில் கடைகளும் இரண்டாவது மாடியில் போக்கு வரத்துச்சபை அலுவலகமும் மூன்றாவது மாடியில் பயணிகள் விடுதி வசதியும் அமைக்கப்பட உள்ளதாக யாழ். மாநகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் இவ்விடயம் பற்றி கூறும்போது நடைபாதை வியாபாரிகள் காரைநகர் பஸ்தரிப்பிடத்தில் (சாமி அன்கோமுன்பாக) அமர்த்தப்பட உள்ளனர் எனவும் தெரிவித்தார்.

இந்நடைபாதை வியாபாரிகளுக்குஇக்கட்டிடம் அமைத்து முடிந்த பின்னர் ஒரு லட்சம் ரூபா செலுத்தி தமக்குத் தேவையான கடையை பெற்றுக் கொள்ள வசதி செய்து கொடுக்கப்படும் எனவும்அவர் தெரிவித்தார். (லோ)

## அம்பாறை மாவட்டத்தில் கண் சத்திர சிகிச்சைகள்

(பொத்துவில் நிருபர்)

நடமாடும் கண்சத்திர சிகிச்சை நிலையம் இம்மாதம் 15ஆம், 17ஆம், 19ஆம் திகதிகளில் அம்பாறை மாவட்டத்திலுள்ள மூன்று இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

15ஆம் திகதி சியம்பலாந்துறையிலும் 17ஆம் திகதி சம்மாந்துறையிலும் 19ஆம்திகதி அம்பாறை ஆதார வைத்தியசாலையிலும் நடைபெற அரச கண்சத்திர சிகிச்சைப் பிரிவு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இந்நடமாடும் இலவசசத்திர சிகிச்சைப் பரிசோதனைநிலையங்களில் தொடர்ச்சியாக ஒருவர் 3 தினங்கள் கண்வெண் புள்ளி காரணமாகப் பரிசோதனைக்குசமுகமளிக்கவேண்டும். அதுவும் சுத்தமான வெண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

குமுதம் ரூ. 7.00 ஆனந்த விகடன் ரூ. 8.00, இந்தியா ருடே தமிழ் ரூ. 22.00, ஞான பூமி ரூ. 20.00 ரத்தினபாலா (சிறுவர் சஞ்சிகை) ரூ. 9.50 கல்கி ரூ. 8.00 மற்றும் அனைத்து சஞ்சிகைகளும் விலை குறைக்கப்பட்டுள்ளன. வியாபாரிகளுக்கு விற்பனை விலையில் இருந்து கழிவு வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

### வகுப்புக்கள்

தொழில் நுட்ப அறிவைப் பெறுபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் RADIO- T.V, DECK, Air Conditioning, Refrigcration வயறிங், வெல்டிங், வைண்டிங், Typing, Spoken-English புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. குறுகிய காலத்தில் சிறந்த செய்முறை அறிமுறைப் பயிற்சிகளுடன் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும். VISPA ENGINEERING AID HALL, 328, NAVALAR ROAD, JAFFNA. (B-664)

### கோழிக்குஞ்சு விநியோகம்

PRIMA LOCHMAN சிவப்பு வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் புறோயிலர் குஞ்சுகள் கறுப்பு சிவப்பு சேவற்குஞ்சுகள் GOLDEN COMET HYLINE BLACK பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன் கிழமைகளில் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். Nallur Farm Centre 19 முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர்.


## 31 குருநகர் மீனவர் நினைவு உதைபந்தாட்ட போட்டி

(விசேட நிருபர்)

மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட 31, குருநகர் மீனவர்களின் ''தூய ஒளி'' ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான 3ஆம் வருட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளை யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் குருநகர், பாடும் மீன் விளையாட்டுக் கழகம் நடத்த ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

போட்டிகள் வடமாகாண ரீதியில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி ஆகிய லீக்குகளுடன் இணைந்த கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும்.

தெரிவாகும் முதற்கழகத்திற்கு 1000 ரூபா ரொக்கப் பணமும் ''தூய ஒளி'' சுழற் கிண்ணம், வெற்றிக்கிண்ணம் ஆகியன வழங்கப்படும். இரண்டாவது கழகத்திற்கு 500, ரூபா ரொக்கப்பணம், வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும்.

பங்குகொள்ளும் கழகங்கள் இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னதாக செயலாளர் திரு. அ. பெனடிக்ற்ராதா, பாடும் மீன் விளையாட்டுக் கழகம் 16, ஐஸ்பிளான்ற் வீதி, குருநகர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

11 பேர்கள் கொண்ட ''நொக்கவுட்'' முறையில் போட்டிகள் நடத்தப்படும் (21)

## திரைப்பட ஊழியர் சங்கம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத் திரைப்பட ஊழியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த திங்கள் மனோகராத் திரையரங்கில் இடம் பெற்றது. நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் எஸ். அமிர்தநாதன், உப தலைவர் எஸ். முல்லைவனநாதன், செயலாளர் இ. சண்முகலிங்கம். ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இக் கூட்டத்துக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் யாழ். பிரதேசப் பொறுப்பாளரும் சமுகமளித்திருந்தார்.

## ஆட்சிக்குழு கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ்-மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் ஆட்சிக்குழுக் கூட்டம் இன்று 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்குச் சம்மேளனத் தலைவர் திரு இ. தவகோபால் தலைமையில் 23, சிவன் பண்ணை வீதியில் உள்ள பணிமனையில் நடைபெற உள்ளது. (24)

## வயலின் பயிற்சி

(கொழும்புத்துறை)

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வயலின் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட உள்ளது.

வயலின் வகுப்புகளில் பங்குபற்ற விரும்புவோர் கடித மூலமோ அல்லது நேரிலோ தமது பெயர், வயது, விலாசம் அடங்கிய விபரங்களுடன் தொடர்பு கொள்ளும்படி நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் இரண்டாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலதிக விபரங்கள் அறிய விரும்புவோர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மேலாளருடன் நேரில் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (24)

## கொழும்பு காங்கேசன்துறை தினசரி இரவு கடுகதி ரயில்

(கொழும்பு)

வடபகுதி மக்கள் தினமும் கொழும்பு-யாழ்ப்பாணம் ரயில்களில் படும் கஷ்டங்களை யடுத்து இரவு கடுகதி ரயில் சேவை ஒன்றை நடாத்த வேண்டும் என்று யாழ். மாவட்ட எம்.பி திரு கே. நவரத்தினம் ஜனாதிபதி ஆர். பிரமேதாஸவிடம் கடித மூலம் கோரியுள்ளார்.

இதன் பிரதி போக்குவரத்து அமைச்சர் விஜயபாலமெண்டிசுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தற்போது உள்ள இரவு தபால் ரயிலுக்கு பின்னர் ஒன்பது மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து இந்தக் கடுகதி ரயில் சேவையை ஆரம்பிக்கலாம் எனவும் அவர் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 15ஆம் திகதி ஓய்வூதிய கொடுப்பனவு

(வட்டுக்கோட்டை)

ஓய்வூதிய கொடுப்பனவுகள் வந்து சேர்ந்தும் இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதி கிளைக்கு கிடைத்த அறிவித்தலின்படி 15 ஆம் திகதிதான் கொடுப்பனவுகள் நடைபெறும் என கூறப்படுகின்றது. (47)

## திறப்பு விழா

(கொழும்புத்துறை)

மாகியம்பதி சூரியோதய சனசமூக நிலையத்தின் புதிய கட்டிடத்திறப்பு விழாவும், நாற்பதாவது ஆண்டு விழாவும் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா இப்புதிய கட்டிடத்தைச் சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தார்.

இந்நிலையத் தலைவர் திரு. செ. செல்வநாயகத்தின் பெரு முயற்சியாலும், நிர்வாகிகளின் விடாமுயற்சியாலும் மிகக் குறுகிய கால எல்லைக்குள் இக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. (24)

## அன்னை பூபதி படத்தில் சேஷ்டை

(வவுனியா)

வவுனியா பழைய நகர சபையில் உள்ள அரங்கத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னை பூபதியின் உருவப்படம் அசிங்கப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் நினைவாக கொண்டாடப்பட்ட எழுச்சி விழாவின்போது இந்த உருவப்படம் அங்கு வைக்கப்பட்டது.

இப் படத்தின் மீது ஆபாசமான ஓவியங்கள் வரைந்தும் எழுதியும் காணப்படுகிறது.

இதனருகில் உள்ள நகர சபைக் கட்டடத்தில் பொலிஸார் இருந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது, (தி)


## யாழ்நகரில் இன்றைய சினிமா

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு 10-30, 2-30. 4-00, 6.30 & 9.30
BRUCELEE IN RUCELEE THELEGEND
கராட்டிப் படம்

**வெலிங்டன் (யாழ்)**
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30, 6-30, 9-30
நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு காலை 10-30 2-30 9-30
கமல், ரஜனி, ஸ்ரீதேவி நடித்த
16 வயதினிலே
(B/860)

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 6·45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் 10·30, 2·30, 6·30, 9·30
கமலஹாசன் - சரண்யா நடித்த
''நாயகன்''
75 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
(கடைசி வாரம்)
B 878

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.30 7.00 9.00
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 10:30 2:30,: 4,00 6:00 7-30 9-00
UNMASKING THE IDOL
(Color)

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

**ராஜா (யாழ்)**
தினசரி 4.00, 6.45, 9.50

NEW BECON
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
காலை நேர வகுப்புகள்
PAPER CLASS
துரித மீட்டல் வினாவிடை வகுப்பு
வர்த்தகம்; திரு. ஜெயராமன்
அளவையியல்; திரு. விக்கி
தமிழ்; செல்வி மீரா
ஆரம்பம்: 14 - 05 - 1990
திங்கள் காலை 6. 30 மணிக்கு
(சனி/ ஞாயிறு வகுப்புகளும் ஆரம்பமாகின்றன)
(R/473)

ஸ்கை வீடியோ மூவிஸ்
நவாலி வீதி, ஆனைக்கோட்டை
வீடியோ படப்பிடிப்பு
கலர் படப்பிடிப்பு
கறுப்பு வெள்ளை படப்பிடிப்பு
பாடல் பதிவு
வீடியோ கசற் வாடகைக்கும் பெற்றுக் கொள்ள
Sky Video Movies


விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கமும், நிதர்சனம் தொலைக்காட்சி நிறுவனமும் இணைந்து நடாத்தும்

## வினா விடைப் போட்டி

நிபந்தனைகள்

(1) யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கான போட்டி ஆகும்.

(2) இப்போட்டியில் க. பொ. த. சாதாரண, உயர்தர மாணவர்கள் பங்குபற்றலாம்.

(3) ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் ஐந்து மாணவர்கள் கொண்ட குழுவாகப் [illegible]பற்றலாம்.

(4) வினாக்கள் அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம், விளையாட்டு, பொது அறிவு சம்பந்தமானதாக அமையும்.

## சித்திரைப் பௌர்ணமித் திருவிழா

(முல்லைத்தீவு)

களப்பாடு வைரவர் ஆலய சித்திரைப் பௌர்ணமித் திருவிழா ஏழு வருடங்களின் பின் புதனன்று நடைபெற்றுள்ளது. இவ்விழாவில் நாதஸ்வரக் கச்சேரியும், அருணா கோஷ்டியினரது இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (58)

## தேனிசை

19முருகேசர் ஒழுங்கை முத்தி செய்யப்பட்டனர். இக் கூட் உள்ள பணிமனையில் நடை
ரைச் சந்தையடி, நல்லூர். டத்துக்கு விடுதலைப் புலிகள் பெறஉள்ளது. (24)

---

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கமும்,
நிதர்சனம் தொலைக்காட்சி நிறுவனமும்
இணைந்து நடாத்தும்

## வினா விடைப் போட்டி

நிபந்தனைகள்

(1) யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கான போட்டி ஆகும்.

(2) இப்போட்டியில் க.பொ.த. சாதாரண, உயர் தர மாணவர்கள் பங்குபற்றலாம்.

(3) ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் ஐந்து மாண வர்கள் கொண்ட குழுவாகப் பங்குபற்றலாம்.

(4) வினாக்கள் அரசியல், பொருளாதாரம், விஞ் ஞானம், விளையாட்டு, பொது அறிவு சம்பந்த மானதாக அமையும்.

விண்ணப்ப முடிவு திகதி 20 - 5 - 90

வெற்றி பெறும் அணிகளுக்கு வெற்றிக்கேடயமும் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளுமாறு வேண்டு கின்றோம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்,
பலாலி வீதி, திருநெல்வேலி

(B 860.)

## சித்திரைப் பௌர்ணமித் திருவிழா

(முல்லைத்தீவு)

களப்பாடு வைரவர் ஆலய சித்திரைப் பௌர்ணமித் திரு விழா ஏழு வருடங்களின் பின் புதனன்று நடைபெற்றுள் ளது. இவ்விழாவில் நாதஸ் வரக் கச்சேரியும், அருணா கோஷ்டியினரது இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற் றன. (58)

## தேனிசை நிகழ்ச்சி

(கிளிநொச்சி)

தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி இம் மாதம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு மாங்குளம் மகாவித்தியாலய மைதானத் தில் நடைபெறும்.

மறுநாள்செவ்வாய்க்கிழமை மாலை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத் திலும் நடைபெறும். (49)


## ஸ்கை வீடியோ மூவிஸ்

நவாலி வீதி, ஆனைக்கோட்டை

வீடியோ படப்பிடிப்பு

கலர் படப்பிடிப்பு

கறுப்பு வெள்ளை படப்பிடிப்பு

பாடல் பதிவு

வீடியோ கசற் வாடகைக்கும் பெற்றுக் கொள்ள

Sky Video Movies

Navaly Road, Anaicoaddai

(B 684)


## படத்தில் சேஷ்டை

(வவுனியா)

வவுனியா பழைய நகர சபையில் உள்ள அரங்கத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னை பூபதியின் உருவப்படம் அசிங் கப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் நினை வாக கொண்டாடப்பட்ட எழுச்சி விழாவின்போது இந்த உருவப்படம் அங்கு வைக்கப் பட்டது.

இப் படத்தின் மீது ஆபாச மான ஓவியங்கள் வரைந்தும் எழுதியும் காணப்படுகிறது.

இதனருகில் உள்ள நகர சபைக் கட்டடத்தில் பொலி ஸார் இருந்து வருகின்றமை யும் குறிப்பிடத்தக்கது, (தி)

## அராலிச்சந்தியில் கொள்ளை

(தீவுப்பகுதி)

வேலணை அராலிச்சந்தியில் வைத்து கொள்ளைக்கோஸ்டி யொன்று யாழ்நகரிலிருந்து வேலணை நோக்கி மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்து கொண்டிருந்த திரு.எஸ்.இரா சலிங்கம் என்பவரை வழி மறித்து பொல்லுகளால் தாக்கி அவர் கழுத்தில் அணிந் திருந்த சுமார் பன்னீராயிரம் ரூபாய் பெறுமதிமிக்க தங்க சங்கிலியை கொள்ளையடித் துச் சென்றுள்ளனர்.

இக் கொள்ளைச் சம்பவம் கடந்த எட்டாந்திகதி இரவு ஒன்பது மணியளவில் நடை பெற்றுள்ளது.

இக் கொள்ளை பற்றி விடு தலைப் புலிகளிடம் முறையி டப்பட்டுள்ளது. (15)


தினசரி 4.00, 6.30
7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00
7-30 9-00

UNMASKING THE IDOL
(Color)

வின்ஸர் - யாழ்
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

ராஜா (யாழ்)
தினசரி 4.00, 6.45, 9.50
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30,2.30,6.30,10.30
ரஜனி ஸ்ரீதேவி நடித்த
மூன்றுமுடிச்சு
அடுத்த வெளியீடு
மௌனராகம்


## புலோப்பளை வீதி திருத்தம்

(பளை)

பளைப் பகுதியில் உள்ள புலோப்பளை வீதி அறத்தி நகர் குடியேற்றம் வரை திருத் தியமைக்கபடவுள்ளது.

திருத்தி அமைக்கப்பட வி ருக்கும் ஒருமைல் நீளமான வீதிக்கு இரண்டரை லட்சம் ரூபா நிதி ஒதிக்கீடு செய்த பளை உதவி அரசாங்க அதி பர் கந்தசாமிக்கு பிரதாபன் சனசமூக நிலையம் பராட்டுத் தெரிவித்துச் கடிதம் எழுதி யுள்ளது. இதே வேளை அறத் தி நகருக்கும் அல்லிப்பளைக் கும் மின்சார விஸ்தரிப்புக்கு ரூபா 25 லட்சம்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாம். (63)


## SLAS இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சை - 1990

விரிவுரைகள் நுண்ணறிவை, பொது அறிவைத் தரா. சுயமான பயிற்சிகளே வெற்றியைத் தரும்.

அதற்கான பயிற்சி நூல்கள்:

★ 1. பொதுளச் சார்பும் பொது அறிவும்
★ 2. கிரகித்தல்
★ 3. நுண்ணறிவு (20.5.90 இல் வெளிவரும் இதற்கென ஆக்கப்பட்ட விசேட நூல்)

ஆக்கியோன்: க. குணராசா M. A., SLAS

பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும்.

★ ஸ்ரீலங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, யாழ்.
★ கமலம் பதிப்பகம், 82, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(R 470)


## வவுனியா வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

நெடுங்கேணி

## பதவி வெற்றிடம்

வவுனியா வடக்கு பல. நோ. கூ. சங்கத்தில் தட்டெழுத்தாளர் (தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் கடமையாற்றக் கூடிய) பதவி ஒன்றிற்கு விண்ணப்பங் கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கல்வித் தகைமை:- | க. பொ. த (சா/ம்) பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி. தட்டெழுத்து வேகம் தமிழ் நிமிடத்திற்கு 20 சொற்கள். ஆங்கி லம் நிமிடத்துக்கு 30 சொற்கள். ஆங்கில மொழியில் கூடிய தகுதி பெற்றிருத்தல் வேண்டும். |
| வயது:- | 18 க்கும் 45 க்கும் உட்பட்டவராதல். |
| பிணை:- | ரூபா 1500/- ரொக்கமாகச் செலுத்தல் வேண்டும். |
| சம்பளம்:- | சம்பள அளவுத் திட்டம் 305/13 படி இரதபடிகளும், நிரந்தர நியமனம் கிடைக்கும்வரை நாளாந்த சம்பளம் வழங்கப்படும். |
| விண்ணப்ப முடிவு திகதி:- | 10. 6. 1990 ஆம் திகதி பகல் 12.00 மணிக்கு முன், தலைவர், வவுனியா வடக்கு ப. நோ. கூ. சங்கம், நெடுங் கேணி என்னும் முகவரிக்குப் பதிவு அஞ்சல் மூலம் அனுப் பப்படல் வேணடும். விண்ணப்பக் கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் தட்டெழுத்தாளருக்கான விண்ணப்ப மெனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் தாமே தயாரித்தல் வேண்டும். |

பொதுமுகாமையாளர்

வ. வ. ப. நோ. கூ. சங்கம்
நெடுங்கேணி.

(B.689)


உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களிலான ஆடைத் தெரிவுகள்

❋ ரெடிமேட் சூட்டிங் சேட்டிங்

வித விதமான உறுதிமிக்க அழகான துணிவகைகள்
கண்ணைப் பறிக்கும் சாறிகள், சீத்தைகள், சில்க்ஸ்

இத்துடன்......

எவர்சில்வர் பாத்திரங்கள், பொருட்கள்
பன்சிகுட்ஸ் பிளாஸ்டிக் பொருட்கள்
இவற்றை எண்ணம்போல் தெரிவு செய்ய

# லக்கி கவுஸ்

யாழ். வீதி, மானிப்பாய்:

(B-671)


## ஆணையாளர் விஜயம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டஉள் ளூராட்சி உதவிஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா எதிர் வரும் 21 ஆம்திகதி திங் கட்கிழமை தமது அதிகாரிகள் சகிதம் வேலணைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

வேலணையில்மேற்கொள்ள இருக்கும் அபிவிருத்தி வேலை களை நேரில் பார்வையிட்டுச் செயல் படுத்தும் நோக்குடனே ஆணையாளர் இங்கு செல்கி றார். (24)

# இந்தியாவை தவறாக மதிப்பிடும் நாடுகள் தக்க பாடம் படிக்கும்

வி. பி. சிங்

(ஸ்ரீநகர்)

இந்திய எல்லைக்குஅப்பால் இருந்து எந்த ஒரு நாடும் தவறாக இந்தியாவை மதிப்பிட்டுஅசட்டுத்துணிச்சலுடன் செயல்பட்டால் அதை இந்திய இராணுவம் மட்டுமல்ல இந்திய மக்களும் சேர்ந்து உறுதியுடன் முறியடிப்பார்கள் என பிரதமமந்திரி வி.பி.சிங் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவில் இந்திய பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர்களிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தையானது ஜம்முகாஷ்மீர் பிரச்சினை பொறுத்து பெருமளவிற்கு நம்பிக்கையை தரவில்லை என்று திரு. சிங் மேலும் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு நடவடிக்கைக்காக பாகிஸ்தான் எல்லைப் புறத்திலுள்ள 500 கிராமங்களை அகற்றி விட்டதாகவும் அகற்றிய குடும்பங்களை தாம் பாதுகாப்பான இடத்தில் அமர்த்தியிருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானில் இருந்து பயிற்சி பெற்ற காஷ்மீர் தீவிரவாதிகள் இடைக்கால தங்கு முகாம்களாக இதனை பாவித்துவந்தார்கள்அதனால் தான் இக் கிராமங்களை அப்புறப்படுத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

## காஷ்மீரில் பாகிஸ்தான் குழப்பத்தை தூண்டவில்லை

### பெனாசிர்

பெனாசிர் மறுப்பு

அதேவேளை பாகிஸ்தானிய பிரதமமந்திரி பெனாசிர் பூட்டோ முஸ்லிம் காஷ்மீர தீவிரவாதிகளை பாகிஸ்தான் தூண்டி விடுவதாக இந்திய அரசாங்கம் சுமத்தும் குற்றச்சாட்டுக்களை மறுத்தார்.

இவ் விவகாரம் பற்றி விசாரிக்குமாறு கனடிய தூதுக்குழுவொன்றைபிரதமர்பெனாசிர் அழைத்திருக்கிறார். கனடிய வெளியுறவு அமைச்சர் மொனிக் லெண்ட்றீயுடன் இஸ்லாமாபாத்தில் நடத்திய சந்திப்பின் போதே பாகிஸ்தான் பிரதமர் மேற்படி அழைப்பை விடுத்தார்.

இந்திய குற்றச்சாட்டு ஆதாரமற்றது கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் ளும் பத்திரிகையாளர்களும் அடங்கிய ஒரு குழு பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில்உள்ள ஆசாத் காஷ்மீருக்கு விஜயம் செய்து உண்மை நிலையை கண்டறியலாம் என பூட்டோ மேலும் கூறினார்.



## பரீட்சையில்மோசடிகண்டுபிடிப்பு 5000 மாணவர் வெளியேற்றம்

(டாக்கா)

பங்களாதேசில் வியாழக்கிழமை நடந்த அரையிறுதித் தேர்வின்போது மோசடி முறைகளை கையாண்டதாக 5000க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

இம் மாணவர்கள் வெளியேற்றப்பட்டபோது வன் செயல்களும், ஆர்ப்பாட்டங்களும் நடந்தன. தேர்வு நடந்த 50 இடங்களில் பொலிசார் பிரம்படி, கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்தார்கள்.

பார்த்தெழுதும் உரிமை வேண்டும் எனக் கோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## ருமேனியாவில் மீண்டும் தேர்தல்

(புக்காவெஸ்ற்)

ருமேனியாவில் கடந்த 40 ஆண்டுகளில் முதல் தடவையாக சுதந்திர தேர்தல் நடைபெறப்போகிறது.

இத் தேர்தலில் பிரச்சாரம் செய்யும் எதிர்க்கட்சிகளுக்கு எதிராக வன்செயல்களும் அச்சுறுத்தல்களும் அதிகரித்து வருகின்றன. இவ் வன்முறைகளைக் கண்டித்து இடைக்கால பாராளுமன்றத்தில் இருந்த முக்கிய கட்சியான தேசிய குடியானவர் கட்சி விலகிக்கொண்டது.

இதேவேளை வேட்பாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பிரித்தானியா வெளியுறவு அமைச்சு ருமேனியாவை கேட்டுக் கொண்டிருக்கிறது. பாதுகாப்பை முன்னிட்டு அமெரிக்கா தனது தூதரை தற்காலிகமாக அழைத்துக்கொண்டுள்ளது.

## அணுசக்தி அமைதிக்கே

(வியன்னா)

ஈராக் தனது அணுசக்திதிட்டங்களை இராணுவ நோக்கங்களுக்காக உபயோகிக்கவில்லை என்று ஐக்கிய நாடுகள் சபையின் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈராக்தனது பாதுகாப்பிற்கு என்றே இவ் ஆலைகளை நிறுவியுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

வியன்னாவிலுள்ள சர்வதேச அணுசக்தி ஏஜென்சி வெளியிட்ட அறிக்கையொன்றில் இது பற்றி கூறப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனத்தின் பரிசோதகர்கள் 1989 மார்ச் முதல் 1990 ஏப்ரல் வரையிலான காலப் பகுதியில் ஈராக்கியஅணு சக்தி நிலையங்களில் மேற்கொண்ட பரிசோதனைகளில் இருந்து இது தெரியவந்துள்ளது என அவ் அறிக்கை தெரிவிக்கிறது.

## லித்வேனியாவில் 4 சீனி ஆலைகள் பூட்டு

(மொஸ்கோ)

லித்வேனியாவின் நான்கு சீனித் தொழிற்சாலைகளும் மொஸ்கோவின் பொருளாதாரத்தடை காரணமாக கடந்த செவ்வாய்க்கிழமை மூடப்பட்டன.

சோவியத் அரசின் இத் தடை காரணமாக கியூபாவில் இருந்து கரும்பு விநியோகம் நிறுத்தப்படும் அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளதாக லித்வேனிய அரசு கூறியுள்ளது. இதனாலேயே கரும்புத் தொழிற்சாலை மூடப்பட்டது

## யாழ். நகரில் வீதிகள் படுமோசம்

யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பல வீதிகள் நீண்ட காலமாகத் திருத்தம் செய்து பராமரிக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாகக் காட்சி கொடுக்கிறது. (24)

## இவர்களுக்கு வழங்கப்படவில்லை

(வவுனியா)

வவுனியா கச்சேரியில் உள்ள உள்நாட்டு வியாபாரப் பகுதியிலும், புள்ளிவிபரப் பகுதியிலும் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கான பாதிப்படைந்தோர் ஊக்குவிப்புப்பணம் வழங்கப்படவில்லை.

இது சம்பந்தமாக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)

## வீட்டுத்திட்ட வேலைகள் ஸ்தம்பிதம்

(வந்தாறுமூலை)

செங்கலடி வீ. சி. றோட், கொலனியில் 1985ஆம் ஆண்டு றெட் பானாவின் உதவியினால் வீட்டுத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இதுவரையும் இத் திட்டம் முற்றுமுழுதாகப் பூர்த்தி செய்யப்படவில்லை.

அத்துடன் இக்கிராமத்தில் ஒழுங்கான வீதிகளும், வடிகால் அமைப்பும் சீர் செய்யப்படவில்லை. இதனால் மழை காலத்தில் வடிகால்கள் இருந்தும் நீர்தேங்கி நிற்கிறது. (29)

## இராணுவ அட்டூழியங்களிலும் துணிச்சலுடன் செயற்பட்டவர்

(கிளிநொச்சி)

அமரர் தியாகராஜா ஒரு கடமை வீரர் மதப்பற்று மிக்கவர் கிளிநொச்சி நகரில் இராணுவ நடவடிக்கைகளின் போது மக்கள் நடமாட அஞ்சியிருந்த காலத்தில் பஸ் டிப்போவிலிருந்து துணிச்சலுடன் பணி புரிந்தவர்.

இலங்கை இந்திய இராணுவத்தால் பல தடவைகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்.

இவ்வாறு கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம் மறைந்த கிளிநொச்சி டிப்போ அத்தியட்சகர் தியாகராஜாவுக்குஇறுதி அஞ்சலி செலுத்தி பேசுகையில் கூறினார்.

கிளிநொச்சி டிப்போவில் அன்னாரின் சடலம் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

அரசாங்க அதிபர் திரு.கே மாணிக்கவாசகர்தமது இரங்கலுரையின் போது ஒருவர் தனது இனத்துக்கும் பிறந்த நாட்டிற்கும் அதற்கு மேலாக உலகத்திற்காக என்ன நன்மை செய்கிறானே அது தான் நிலைத்து நிற்கும் என்றார்.

## வீதியால் போக முடியாத நிலை

(வந்தாறுமூலை)

கிரான் வடமுனை வீதி பல வருடங்களாக திருத்தப்படாமல் உள்ளது. வீதியில் பள்ளமும்படுகுழியுமாககாட்சி அளிப்பதால் விவசாயிகளே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

விவசாயிகள் இவ்வீதியை போக்குவரத்துக்கு பயன்படுத்தி வருகின்றனர். பல வருடங்களுக்கு முன்பு இங்கு பஸ் சேவை நடைபெற்று வந்தது.

தற்போது இவை நடைபெறுவதில்லை எனவே உரிய அதிகாரிகள் இவ் குறைபாட்டை நிவர்த்தி செய்ய வேண்டுமென இப்பகுதி மக்கள் கேட்கின்றனர். (29)

## இந்திர விழாவில் விடுதலைக் கீதங்கள்

(கரவெட்டி)

வல்லை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற இந்திர விழாவைச் சிறப்பிக்க வரவழைக்கப்பட்ட கொழும்பு சித்தாரா இசைக் குழுவினர் விடுதலைக் கீதங்களைப்பாடி மக்களை மகிழவைத்தனர்.

யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் பெருக்கெடுத்துவந்த இலட்சக் கணக்கான மக்கள் முன்னிலையில் ''மக்களெல்லாம் மக்களெல்லாம் பிரபாகரனின் பக்கம்''...... என்றபாடலைப் பாடியபோது வானைப்பிளக்கும் கரகோசம் எழுப்பி மகிழ்ச்சிக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்ததைக் காண முடிந்தது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மேற்படி இசைக்குழுவின் அறிவிப்பாளர் ''நாம் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்தாலும் தமிழர்களே எமக்கும் தமிழ் பற்று உண்டு தமிழினத்தின் விடிவிற்காகப் போராடிக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் தியாகங்களை மதிக்கிறோம்'' என மகிழ்ச்சியுடன் மக்கள் முன்னிலையில் கூறினார். தொடர்ந்து ''நடந்து வந்த பாதை தன்னை திரும்பிப் பாரடா'' என்ற பாடலைப் பாடி மக்களை மீண்டும் மகிழ வைத்தனர்.

இதேநேரம் இந்நிகழ்ச்சிக்காக வரவழைக்கப்பட்டயாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு இசைக்குழுக்களும் விடுதலைக் கீதங்களைப்பாடி மக்களை மகிழ வைத்தனர்.

இந்நிகழ்ச்சியைக் கண்டு கழிப்பதற்காக வருகை தந்த மக்கள் பலரும் வல்லைச் சந்தியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 3 புலி உருவங்களையும் பார்த்து மகிழ்ந்தனர். (18)

## சாவகச்சேரியில் வீட்டுக்கடன் விண்ணப்பம்பெற நீண்டவரிசை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி உதவி அரச அதிபர் பணிமனையில் நேற்று அதிகாலையிலேயே நீண்ட வரிசையில் பெருந்தொகையான மக்கள் காணப்பட்டனர் பலகிராமப் பகுதிகளில் இருந்தும் கால்நடையாகவே பலர் வந்திருந்தனர், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் 15 லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கிராமிய வீடமைப்புக் கடன் பெறுவதற்கான விண்ணப்பங்களை வழங்கி தமது பெயர்களைப் பதிவு செய்வதற்கே இப் போட்டி நிலவுகிறது

இது பற்றி சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்ததாவது, விண்ணப்பதாரரின் பட்டியல் பதிவு செய்து வழங்குதல் தொடர்ந்து இம்மாதம் 23 ஆம் திகதிவரை நடைபெறும் எனவும் பொதுமக்கள் வீண் சிரமம் கொள்ளாது தமது கடனுக்கான படிவங்களைப் பெறலாம் எனவும் கூறினார் (மு)

## மலையக மக்களை வலுக்கட்டாயமாக இந்தியாவிற்கு அனுப்ப கூடாது

- இடது கம்யூனிஸ்ட்

(யாழ்ப்பாணம்)

முன்பு இந்தியப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்து கடவுச் சீட்[illegible]ற்றுக்கொண்ட ஒரு[illegible]ட்சத்துக்கு அதிகமான தோட்டத் தொழிலாளர்களை உடனடியாக இந்தியா பெற்ற ஒரே காரணத்துக்காக அவர்களை நாட்டை விட்டு அகற்றவேண்டும் என அதட்டி நிற்கும் அரசின் நிலை முழுத் தோட்டத் தொழிலாளர்களையும் அச்சுறுத்துவது போன்றதாகும்.

பல நோ. கூ. சங்கத்துக்கு

ஒப்பந்தகாரர்களுக்குக்

தொண்டர் ஆசிரியர்

யேற்றப்பட்டபோது வன்செயல்களும், ஆர்ப்பாட்டங்களும் நடந்தன. தேர்வு நடந்த 50 இடங்களில் பொலிசார் பிரம்படி, கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்தார்கள்.

பார்த்தெழுதும் உரிமை

யாக சுதந்திர தேர்தல் நடைபெறப்போகிறது.

இத் தேர்தலில் பிரச்சாரம் செய்யும் எதிர்க்கட்சிகளுக்கு எதிராக வன்செயல்களும் அச்சுறுத்தல்களும் அதிகரித்து வருகின்றன. இவ் வன்முறை

தேசிய குடியானவர் கட்சி விலகிக்கொண்டது.

இதேவேளை வேட்பாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பிரித்தானியா வெளியுறவு அமைச்சு ருமேனியாவை கேட்டுக் கொண்டிருக்கிறது. பாதுகாப்பை முன்னிட்டு அமெரிக்கா தனது தூதரை தற்காலிகமாக அழைத்துக்கொண்டுள்ளது.

துள்ளது என அவ் அறிக்கை தெரிவிக்கிறது.

## லித்வேனியாவில் 4 சீனி ஆலைகள் பூட்டு

(மொஸ்கோ)

லித்வேனியாவின் நான்கு சீனித் தொழிற்சாலைகளும் மொஸ்கோவின் பொருளாதாரத் தடை காரணமாக கடந்த செவ்வாய்க்கிழமை மூடப்பட்டன.

சோவியத் அரசின் இத் தடை காரணமாக கியூபாவில் இருந்து கரும்பு விநியோகம் நிறுத்தப்படும் அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளதாக லித்வேனிய அரசு கூறியுள்ளது. இதனாலேயே கரும்புத் தொழிற்சாலை மூடப்பட்டது

## யாழ். நகரில் வீதிகள் படுமோசம்

யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பல வீதிகள் நீண்ட காலமாகத் திருத்தம் செய்து பராமரிக்கப் படாத நிலையில் குன்றும் குழியுமாகக் காட்சி கொடுக்கிறது. (24)

## இவர்களுக்கு வழங்கப்படவில்லை

(வவுனியா)

வவுனியா கச்சேரியில் உள்ள உள்நாட்டு வியாபாரப் பகுதியிலும், புள்ளிவிபரப் பகுதியிலும் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கான பாதிப்படைந்தோர் ஊக்குவிப்புப்பணம் வழங்கப்படவில்லை.

இது சம்பந்தமாக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)

(வந்தாறுமூலை)

கிரான் வடமுனை வீதி பல வருடங்களாக திருத்தப்படாமல் உள்ளது. வீதியில் பள்ளமும்படுகுழியுமாககாட்சி அளிப்பதால் விவசாயிகளே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

விவசாயிகள் இவ்வீதியை போக்குவரத்துக்கு பயன்படுத்தி வருகின்றனர். பல வருடங்களுக்கு முன்பு இங்கு பஸ் சேவை நடைபெற்று வந்தது.

தற்போது இவை நடைபெறுவதில்லை எனவே உரிய அதிகாரிகள் இவ் குறைபாட்டை நிவர்த்தி செய்ய வேண்டுமென இப்பகுதி மக்கள் கேட்கின்றனர். (29)

கவே பலர் வந்திருந்தனர், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் 15 லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கிராமிய வீடமைப்புக் கடன் பெறுவதற்கான விண்ணப்பங்களை வழங்கி தமது பெயர்

டர்ந்து இம் மாதம் 23 ஆம் திகதிவரை நடைபெறும் எனவும் பொது மக்கள் வீண் சிரமம் கொள்ளாது தமது கடனுக்கான படிவங்களைப் பெறலாம் எனவும் கூறினார் (மு)

## மலையக மக்களை
## வலுக்கட்டாயமாக இந்தியாவிற்கு அனுப்ப கூடாது
### - இடது கம்யூனிஸ்ட்

(யாழ்ப்பாணம்)

முன்பு இந்தியப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்து கடவுச் சீட்[illegible]ற்றுக்கொண்ட ஒரு[illegible]ட்சத்துக்கு அதிகமான தோட்டத் தொழிலாளர்களை உடனடியாக இந்தியாவுக்கு அனுப்பி வைக்கவேண்டும் என தோட்டத் தொழில் துறை, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் வெளியிட்டுள்ள கூற்று மிக விசனத்துக்குரியதாகும். அத்துடன் சுய விருப்பின்றி எந்த ஒரு தோட்டத் தொழிலாளியையும் வலுக்கட்டாயமாக இந்தியாவுக்கு அனுப்பப்படுவதை எமது கட்சி எதிர்க்கிறது இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) மத்தியகுழு சார்பில் பொதுச் செயலாளர் சி. கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

அன்று இந்திய பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்து கடவுச் சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் இருந்த பொருளாதார, அரசியல் வன்முறை போன்ற நிர்ப்பந்த சூழ்நிலைகளைக் கணக்கில் கொள்ளாது கடவுச் சீட்டு பெற்ற ஒரே காரணத்துக்காக அவர்களை நாட்டை விட்டு அகற்ற வேண்டும் என அதட்டி நிற்கும் அரசின் நிலை முழுத் தோட்டத் தொழிலாளர்களையும் அச்சுறுத்துவது போன்றதாகும்.

மேலும் அவ்வறிக்கையில், தனக்குத் தேவைப்படும்போது தோட்டத் தொழிலாளர்களை அணைப்பதும் தேவை முடிந்ததும் அதட்டி அடிக்க முனைவதுமான போக்கையே இந்த அரசு பின்பற்றி வந்துள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## பல நோ. கூ. சங்கத்துக்கு பொருட்கள் வந்துள்ளன

(வவுனியா)

வவுனியா பஜார் வீதியில் உள்ள வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள மொத்த விற்பனை நிலையத்திற்கு மொத்தமாக விற்பனை செய்வதற்கு பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தற்போது இச் சங்கத்தில் மொத்த விற்பனை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

சுமார் எட்டு மாதங்களின் பின்னர் இச் சங்கத்திற்கு மொத்தமாக விற்பனை செய்வதற்கு சமாஜத்திலிருந்து பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேற்படி சங்கத்தில் மொத்தமாக விற்பனை செய்வதற்கு எதுவித பொருட்களும் இல்லை என்று ஈழநாதம் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

இச் செய்தி சமாஜத் தலைவர் திரு. வீரசிங்கத்தின் பார்வைக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து, அவர் எடுத்த துரித நடவடிக்கையின் காரணமாக பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தற்போது, முன்னூறு மூடை மாவும் லக்ஸ்பிறே பால்மாவும் மொத்தமாக விற்பனை செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளன.

இதனால் பாவனையாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (தி)

## ஒப்பந்தகாரர்களுக்குக் கூட்டம்

ஒப்பந்தக்காரர்களுக்கான சங்க அங்குரார்ப்பணக் கூட்டமானது எதிர்வரும் 15ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்குக் கிளிநொச்சி மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு ஒப்பந்தக்காரர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் கேட்டுக் கொள்கிறார்கள்.

## கொழும்பு திரையரங்கில் பயங்கர ஆயுதங்கள்

(கொழும்பு)

பொலிஸ் விசேட பிரிவொன்று கொழும்பிலுள்ள திரையரங்கு ஒன்றைச் கடந்த புதனன்று சுற்றி வளைத்துத் தேடியது. தேடுதலின் போது ஒரு இயந்திரத் துப்பாக்கி 100 துப்பாக்கி ரவைகள், மூன்று கிறனேற்றுக்கள், நான்கு ரவைக் கூடுகள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன,

கிறனேற்றுக்கள் வெளிநாட்டுத் தயாரிப்பு என்கின்றார் கொட்டாஞ்சேனைப் பொலிஸ் இன்ஸ்பெக்கடர்கனில்.

ஆயுதங்கள் தாக்குதல் குழு ஒன்றினால் கொழும்புக்கு கொண்டுவரப் பட்டன திரையங்கில் பலர் விசாரணைக்குட்படுத்தப் பட்டனர்.

புலன் விசாரணைகள் தொடர்கின்றன

## தொண்டர் ஆசிரியர்
## நிரந்தரமாக்குவது தொடர்பாக அறிவித்தல் இல்லை

(யாழ்ப்பாணம்)

இரண்டாம் தவணை பாடசாலை ஆரம்பமானவுடன் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கப்படுவர் என முன்னர் கல்விச்சேவை ஆணைக்குழுவால் அறிவிக்கப் பட்டிருந்தது. இதுவரை இது சம்பந்தமாக எவ்வித அறிவித்தலும் வரவில்லை என தொண்டர் ஆசிரியர்களும், பாடசாலை அதிபர்களும் யாழ். கல்விப் பணிப்பாளரிடம் சந்தேகம் தெரிவித்துள்ளார்கள்.

இது விடயமாக யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் யாழ். கல்வித் திணைக்களத்தினால் சகல தொண்டர் ஆசிரியர்களின் விபரங்கள் யாவும் கல்விச் சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அவை நன்கு பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் விரைவில் நேர்முகப்பரீட்சை நடைபெறுமெனவும் கூறினார்,

இந்நியமனங்கள் வழங்கப் படுவதன் மூலம் நீண்டகாலம் நிலவிவந்த தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினை முடிவுக்குக் கொண்டுவரப்படும் எனவும் இவ் ஆசிரியர்கள் யாவரும் பயிலுனர் ஆசிரியர்களாகவே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (மு)

## இளம் பெண் தற்கொலை

வவுனியா முருகனூர் பகுதியில் இளம் பெண் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்-

விஜயசிங்க சாரதாதேவி (வயது 20) என்ற பெண் குடும்பப் பிரச்சினை காரணமாக தற்கொலை செய்து கொண்டார் என்று கூறப்பட்டது.

புதன்கிழமை இரவு கிருமிநாசினி அருந்திய இவர் வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டபோது இறந்தார். (தி)

## ஓய்வூதியம் பெறுவோருக்கு வாழ்க்கை செலவுப்படி

(வவுனியா)

மாதாந்த ஓய்வூதியம் பெறுவோருக்கான வாழ்க்கைச் செலவுப்படி ரூபா 260 இம் மாதம் முதல் வழங்கப்படும்.

1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அதிகரிக்கப்பட்டு இதுவரை வழங்கப்படாத வாழ்க்கைச் செலவுப் படியை மே மாதம் முதல் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக வடமாகாண ஓய்வுதியச்சங்க தலைவர் வி. எஸ் ராமநாதனுக்கு ஓய்வூதிய திணைக்களபணிப்பாளர்தெரிவித்துள்ளார்.

ஓய்வூதியம் பெறுபவரில் தங்கியிருக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஆண் பெண் இருபாலாருக்கும் இலவசபுகையிரத ஆணைச் சீட்டுகள் வழங்கப்படும்.

இவற்றை பெற விரும்புவோர் தமது பகுதி கிராம சேனவஅலுவலரிடம் இருந்து தாம் பெற்றோரில் தங்கியுள்ளதை உறுதிப்படுத்தும் பத்திரத்தை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## பளையில் வீட்டுக் கடன் விண்ணப்பம்

(பச்சிலைப் பள்ளி)

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வீடுகட்ட 12, 500 ரூபா கடன் பெற தேசியவீடமைக்கும் அதிகாரசபையின் வீடமைப்பு உத்தியோகஸ்தரினால் விண்ணப்பப் படிவம் 2ரூபா விலைக்கு வழங்கப்படுகிறது. இக்கடனுக்கு 2400 ரூபாவிற்கு குறைந்த வருமானம் உள்ள சகலரும் விண்ணப்பிக்கலாம் என உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (63)



மட்டக்களப்பில் தேனிசை செல்லப்பாவின் இசை நிகழ்ச்சியின் போது தேனிசை செல்லப்பா, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித்தலைவர் கரிகாலன், புலிகளின் மட்டு - அம்பாறைப் பிராந்தியத்துணைத் தளபதி றீகன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், யாழ். மாவட்ட மகளிர் முன்னணியின் கலை கலாசாரப் பிரிவுப் பொறுப்பாளர் சீத்தா, விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் கலை கலாசாரப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.

# சில ஆசிரியர்கள் கையொப்பம் வைத்துவிட்டு பாடசாலைக்கு சமுகமளிப்பதில்லை

## - கல்வியமைச்சர் லலித்

(கோகலை)

நாட்டின் சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் கடமையாற்றுவது கவலைக்குரியதாகவுள்ளது. சில ஆசிரியர்கள் அதிக லீவு எடுக்கின்றனர். சிலர் வந்ததாகக் கையொப்பமிட்டு விட்டு பாடசாலையில் இருப்பதில்லை. இவர்களைப் பற்றி அப்பாடசாலைகளின் அதிபர்கள் சிலர் நடவடிக்கை எடுக்கவோ உயரதிகாரிக்குப் புகார் செய்யவோ தயங்குகின்றனர்.

இவ்வாறு கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி இங்குநடைபெற்ற அதிபர்கள் மாநாட்டில் பேசும்போது கூறினார். அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பல்வேறு பிரச்சினைகள் இருப்பதை நான் அறிவேன். பல ஆசிரியர்கள் வயது முதிர்ந்த காலத்தில் ஓய்வூதியம் பெறுவதற்காக அலுவலகங்களுக்கு அலைந்து திரிவதையும் நான் அறிவேன். இது பெரும் அநியாயம் இவர்கள் ஓய்வுபெற்று இரண்டொருமாதத்தில்தமது பென்சனைப்பெறநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் சொன்னார்.

ஆசிரியர்களும், அதிபர்களும் சிறந்த முன்மாதிரியாக நடக்க வேண்டும். அவர்களிடம் நல்ல குணங்கள் வளர வேண்டும். அப்படியல்லாது கடமைக்காகப் பணிபுரியும் அதிபர் ஆசிரியர்கள் தயவு செய்து கல்வித்துறையில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

எமதுநாட்டின்கல்வித்துறையில் முதலில் மாணவருக்கே முதலிடம். இரண்டாவது ஆசிரியர்கள். மூன்றாவதாகப் பெற்றோர். நான்காவதாகக் கல்வித் திணைக்களம். இந்த முறையில் கல்வித்துறையை மேம்படுத்துவதே என்துபணி.

முன்னர் முதலாம், இரண்டாம். மூன்றாம் இடங்கள் கல்வித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டன. மாணவர்களின் நலனில் அக்கறை செலுத்தும் ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்குமே கல்வியமைச்சும், கல்வித் திணைக்களமுமேயன்றி கல்வித் திணைக்களத்திற்காக கல்வியும், மாணவரும், பெற்றோரும், ஆசிரியருமல்ல.

இவ்வாறு அமைச்சர் அத்துலத் முதலி கூறினார்.

# தேங்காய் எண்ணெயை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

தேங்காய் எண்ணெய் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு இந்த வருடம் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தேங்காயெண்ணெக்கு கூடுதலான வெளிநாட்டுச் சந்தையைப் பெற்றுக்கொள்வதற்கென கொரியா, சீனா, இந்தியா ஆகிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தப் படுகின்றன.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரட்ண தேங்காயெண்ணெக்கு சிறந்த வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக நாடுகள் பலவற்றுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளார்.

1988 ஆம் ஆண்டில் 5350 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டது. கடந்த ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேங்காயெண்ணை 29, 660 மெற்றிக் தொன்களாகும்.

# தமிழ் பொலிஸ்காரர் தாக்கப்பட்டார்

(வவுனியா)

வவுனியா நகரில் பொது மக்கள் முன்னிலையில் தமிழ்ப் பொலிஸ்காரர் சிங்களப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவரினால் தாக்கப்பட்டார்.

இச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை நிகழ்ந்தது.

தாக்குதலுக்கு உள்ளான பொலிஸ்காரரின்கையிலிருந்த எஸ். எல். ஆர். துப்பாக்கி பறிமுதல் செய்யப்பட்டது.

தாக்கிய பின்னர் தான் முடிவெட்டவில்லை என்று அந்த உயர் அதிகாரியினால் காரணம் கூறப்பட்டதாம். 'உங்களையெல்லாம் சுட்டுக் கொன்று போடுவோம்' என்று என்று மிரட்டப்பட்டதாக கூறப்படுகிறது.

இத் தாக்குதல் சம்பவத்திற்கு அடிப்படையில் ஏதோ காரணம் ஒன்று இருக்க வேண்டும் என்று விஜயமறிந்த வட்டாரங்களினால் ஊகிக்கப் படுகிறது.

இது குறித்து மேலிடத்திற்கு புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)

# 1989 ஆம் ஆண்டு நான்குமாத காணிப்பதிவு ஆரம்பம்

1989 ஆம் ஆண்டு முதல் நான்கு மாதத்திற்கான காணிப் பதிவு வேலைகள் இம் மாதம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நடைபெற உள்ளதாக யாழ் செயலக காணிப்பதிவு அலுவலக அதிகாரி தெரிவிக்கிறார்

இக் காலகட்டத்தில் இடம் பெற்ற காணி சம்பந்தமான மாற்றல் நடவடிக்கைகள் யாவும் உடன் பதிவு செய்யப் படவேண்டும் எனவும் அந்தந்த காலப் பகுதிகளில் பதிவு செய்து பதிவு வேலையில் ஏற்படும் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் வேண்டிக் கொள்கிறார்.


வட இலங்கை சிகையலங்கரிப்பாளர் சங்கப்

**பொதுக் கூட்டம்**

இடம்: மனோகரா திரைமாளிகை
யாழ்ப்பாணம்

காலம்: 16.05.1990 புதன் கிழமை
காலை 8.00 மணி

வடபகுதி அடங்கிலுமுள்ள சிகை அலங்கரிப்பாளருக்குமான முக்கிய பொதுக் கூட்டம் இதுவாதலால் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகிறது தவறின் ஒழுங்கமைப்புக் கோவை நான்காவது சரத்திற்கமைய நடவடிக்கை மேற்கொள்ள நேரும்.

புதன் கிழமை தவிர்ந்த நாளில் கடையைப் பூட்டுபவர்களும் அன்றையதினம் கடைகளைஅடைத்துக்கூட்டத்தில் பங்கெடுக்கக் கேட்கப்படுகின்றனர்.

கிளைச் சங்கங்கள், உறுப்பினர்களுக்கும் இவ்வறிவித்தல் பொருந்தும்.

தலைவர் — சு. இராசேந்திரம்
செயலாளர் — செ. சிவராசா

(R 469)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி




# தொழிற் பயிற்சிகள்

**❋ Airconditioning & Refrigeration**

நீண்ட கால இடைவெளிக்குப் பின் மீண்டும் யாழ் நகரில் இவ்வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. மத்திய கிழக்கு நாடுகளில் வேலை செய்வதற்கு ஏற்றவாறு செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 4 மாதம்

**❋ Spoken English**

ஒரு மாத முழுநேர வகுப்பும் சனி, ஞாயிறு மாலை நேர வகுப்புகளும் நடைபெறும்.

அச்சடித்த பாடக் குறிப்பு இலவசமாக வழங்படும்.

**❋ றேடியோ ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங்**

ரெலிவிஷன், வீடியோ டெக், றேடியோ திருத்தப்படும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 4 மாதம்

**❋ றிவைண்டிங்**

ரான்ஸ்போமர், மின்மோட்டர், மின் விசிறி, ஆமேச்சர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப் படும்.

காலம்: 4 மாதம்

**❋ எலக்ரிக்கல் வயறிங்**

வீட்டு மின்சார வேலை, மின்சார பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 2 மாதம்

மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்

**16-5-90** (கிழமை நாட்கள்) **19-5-90** (சனி, ஞாயிறு)

குறிப்பு: யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டத்தில் உள்ளோர் தபால் மூலம் (1) றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங், (2) றீவைண்டிங், (3) எலக்ரிக்கல் வயறிங் பயிற்சிகளை பயிலலாம். பயிற்சி முடிவில் அந்தந்த மாவட்டங்களில் ஒருவார செய்முறைப் பயிற்சிவகுப்பு நடாத்தப்படும். சேரவிரும்புவோர் 25. 05. 1990 முன் சுய விலாசமிடப்பட்ட கடித உறை அனுப்பி விபரங்களை பெற்றுக்கொள்ளவும்.

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(றெயில்வே கடவையருகாமை)

(B 688)



அன்றும்... இன்றும்... என்றும்...

உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்கள்

**மல்லிகா ஸ்ரோர்** ஸ்தாபனத்தார்

- ❋ பலசரக்குச் சாமான்கள்
- ❋ பன்சி குட்ஸ் வகைகள்
- ❋ மருந்துச் சரக்கு வகைகள்
- ❋ குளிர்பானங்கள்
- ❋ பிஸ்கட் வகைகள்
- ❋ பால்மா வகைகள்
- ❋ இறைச்சிக் கோழிகள்
- ❋ கோழி முட்டைகள்
- ❋ கால் நடைத் தீனிகள்
- ❋ கோழித் தீன்

இத்தனையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள

# மல்லிகா ஸ்ரோர்

ஸ்தாபனத்தார்

- பலசரக்குச் சாமான்கள்
- பன்சி குட்ஸ் வகைகள்
- மருந்துச் சரக்கு வகைகள்
- குளிர்பானங்கள்
- பிஸ்கட் வகைகள்
- பால்மா வகைகள்
- இறைச்சிக் கோழிகள்
- கோழி முட்டைகள்
- கால் நடைத் தீனிகள்
- கோழித் தீன்

இத்தனையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள

# மல்லிகா ஸ்ரோர்

## மானிப்பாய்.

(B 670)

பிரபல தினசரிப் பத்திரிகை விற்பனையாளர்

---

## உதவித் தாதியர் பயிற்சி நெறி

## TRAINING FOR NURSES AIDE

19-5-90 இல் ஆரம்பமாகவுள்ளன

1. தகைமை வாய்ந்த பதிவுத்தாதியர்களால் (R. N. O) விரிவுரைகள் நடைபெறுகின்றன
2. பதினெட்டு மாதகால பாடத்திட்டங்கள் ஆறுமாதகால செய்முறைப் பயிற்சிகள்
3. செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ்நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்தியசாலையில் நடைபெறுகின்றன
4. அரச அங்கீகாரம் பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
5. பாடத்திட்டங்கள் யாவும் தமிழ் மொழிமூலம் போதிக்கப்படுகின்றன
6. இலவச ''அக்குபங்சர்'' பயிற்சிகள்

உங்கள் பதிவுகட்கு:-

அதிபர்

Dr. V. P. சுந்தரராஜன்

## சாயி மெடிக்கல் அக்கடமி

இல 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

B.675


---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கப்டன் கரேந்திரன்

(செல்வவிநாயகம் - ஞானசேகரம்)

தாயவளின் மடியினுக்கு: 13- 12- 1967

தமிழீழ விடிவினுக்கு: 13- 5- 1988

மண்ணுக்காய் மரணித்த மறக்குலத்துச் சின்னமே....!
உன் இலட்சியக் கனவுகள்.....!
எங்கள் எண்ணங்களில் அலையெனவே பாய்கின்றன
உன் உணர்ச்சிப் பிழம்புகள்....
எங்கள் உள்ளங்களில் அனலெனக் காய்கின்றன
உன் இதயக் குமுறல்கள்....
எங்கள் இதயங்களில் எரிமலையாய்க் கொந்தளிக்கின்றன
உன் கருத்துக் குவியல்கள்....
எங்கள் சிந்தைகளில் புயலெனச் சீறுகின்றன
உன் வரலாற்றுச் சாதனைகள்....
எங்கள் உணர்வுகளை இதமுடனே மீட்டுகின்றன
உன் உதிரப் பெருக்குகள்....
எங்கள் நரம்புகளில் ஆறெனவே ஓடுகின்றன
உன் இறுதி நேர ஆசைகள்....
எங்கள் ஞாபகத்தில் வித்துக்களாய்ப் பொலிகின்றன
உன் அழகுக் கோலங்கள்...
எங்கள் நினைவுகளில் நிழலெனவே ஆடுகின்றன
ஓ............................ ....
மண்ணுக்காய் மரணித்த மறக்குலத்துத் திலகமே
உன் அடிச் சுவடுகள்....
தமிழீழத் தாயகத்தின் வழிச்சுவடுகள்

நெடியகாடு, வல்வெட்டித்துறை.

அப்பா, அம்மா, தம்பி, தங்கை, உறவினர், நண்பர்கள்.

(R.467)

---


திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 2 மாதம்

மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்

16-5-90 (கிழமை நாட்கள்) 19-5-90 (சனி, ஞாயிறு)

குறிப்பு: யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டத்தில் உள்ளோர் தபால் மூலம் (1) றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங், (2) றீவைண்டிங், (3) எலக்ரிக்கல் வயறிங் பயிற்சிகளை பயிலலாம். பயிற்சி முடிவில் அந்தந்த மாவட்டங்களில் ஒருவார செய்முறைப் பயிற்சிவகுப்பு நடாத்தப்படும். சேரவிரும்புவோர் 25. 05. 1990 முன் சுய விலாசமிடப்பட்ட கடித உறை அனுப்பி விபரங்களை பெற்றுக்கொள்ளவும்.

## JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(றெயில்வே கடவையருகாமை)

(B 688)

---

உங்கள்...

- மின் விசிறி
- அயன்பொக்ஸ்
- நீரிறைக்கும் மோட்டர்கள்
- டை மோக்கள்

முதலிய அத்தனையும்

உடனுக்குடன் வைன்டிங் செய்து தருபவர்கள்; நம்பிக்கையான முறையில் திருத்தித் தருபவர்கள்

# சசி எலெக்ரிக்கல்ஸ்

இல. 08, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(B 663)

---

எம்மிடம் உங்கள் தேவைக்கான

- பலசரக்குச் சாமான்கள்
- தரமான புகையிலைகள்
- சுருட்டுகள்
- சாப்புச் சாமான்கள்

மலிவு விலையில் பெற்றுக் கொள்ளுங்கள்.

## கே. கணேசா ஸ்ரோர்

சந்தையடி - மானிப்பாய்.

(B/667)

### சிந்தனைக்கு

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 13 - 05 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

## பாண் கொள்ளை!

காலையில் பள்ளிக்கூடம் போகும் பிள்ளைகள், தொழிலுக்குப் போகும் குடும்பத்தினர் ஆகிய பலதரப்பட்ட மக்களும் சிரமமில்லாமலும் அவசரமாகவும் வயிற்றுப் பசியைத் தீர்த்துக்கொள்வதற்கு பாண்தான் சமயசஞ்சீவி.

சமீபத்தில் கோதுமைமாவின் விலை உயர்த்தப்பட்டது. பாணின் விலையும் அதிகரிக்கப்பட்டது. ஒரு இறாத்தல் பாண் என்று மக்கள் வாயில் பழக்கப்பட்டுவிட்ட பாணின் எடை நானூற்றிஐம்பது கிராமாக இருக்கவேண்டுமென்றும் இதன் விலை நான்கு ரூபாய் தொண்ணூறு சதமாக இருக்கவேண்டுமென்றும் நிர்ணயிக்கப்பட்டது.

கொழும்பிலும் மற்றும் தென்னிலங்கையிலும் நானூற்றி ஐம்பது கிராம் எடையுள்ள பாண் நான்கு ரூபாய் தொண்ணூறு சதத்திற்கே விற்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள பேக்கரி உரிமையாளர்கள் சிலர் சேர்ந்து நானூற்றி ஐம்பது கிராம் நிறையுள்ள பாண் தயாரித்து நான்குரூபாய்தொண்ணூறு சதத்திற்குக் கொடுக்க முடியாதென்று தீர்மானித்தனர்.

முந்நூற்றி ஐம்பது கிராம் நிறையுள்ள பாண் தயாரித்து நான்கு ரூபாய் தொண்ணூறு சதத்திற்கு விற்றாலும் தங்களுக்கு இலாபமில்லை என்று பட்டியலே போட்டுக் காட்டியுள்ளனர்.

450 கிராம் பாண் தயாரிப்பதில் தமக்கு நெருக்கடி இருப்பதாக தெற்கில் உள்ள பேக்கரி உரிமையாளர்களும் அரசாங்கத்திற்குச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்கள். அமைச்சு அதுபற்றி ஆலோசித்து வருவதாகவும் மறுமொழி கூறியுள்ளது.

ஆனால் வடபகுதி பேக்கரி உரிமையாளர்கள் தான்தோன்றித்தனமாக 350 கிராம் பாண் போடுவதாக முடிவு எடுத்து அதற்கு நியாயமும் கற்பிக்கின்றார்கள். தெற்கிலும் வடக்கிலும் அவ்வாறு என்ன பெரிய அளவில் மூலப்பொருட்களில் விலை வீச்சு ஏற்பட்டுள்ளது.

தெற்குப்பகுதி பேக்கரிகளுக்கும் திருமலையில் உள்ள பிறிமா தொழிற்சாலையில் இருந்துதான் மா செல்கின்றது. திருமலையில் இருந்து மாத்தளை அம்பாந்தோட்டைக்கும் இடையில் உள்ள தூரத்தைவிட யாழ்ப்பாணத்திற்கு உள்ள தூரம் குறைவு. இதனால்

# கொண்டச்சி மரமுந்திரிகைச் செய்கையும் அதன் பின்னணியும்

இலங்கையின் பயிர்ச் செய்கையைப் பன்முகப்படுத்துதல் தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகளில் மரமுந்திரிகைச் செய்கை ஒரு பிரதான இடத்தினைப் பெற்றுள்ளது. குறிப்பாக இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவும் காலநிலை, மண்வளம் என்பவற்றைச் சாதகமாகப் பயன்படுத்தி அப்பிரதேசங்களின் எல்லைப் புறங்களில் மேற்கொள்ளப்பட்டுவந்த மரமுந்திரிகைச் செய்கையானது ஒருபுறம் அபிவிருத்தி நடவடிக்கையாகக் கொள்ளப்படினும் மறுபுறத்தில் அபிவிருத்தி என்ற போர்வையில் மேற்கொள்ளப்படுகின்ற ஒருவித ஆக்கிரமிப்பு நடவடிக்கை என்று சொல்வதே பொருத்தமானதாகும். இக்கட்டுரையில் கொண்டச்சி என்ற இடத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட்டுவந்த மரமுந்திரிகைச் செய்கையும் அதன் பின்னணியும் பற்றி சுருக்கமாக நோக்கப்பட்டுள்ளது.

கொண்டச்சி மரமுந்திரிகைப் பண்ணையானது மன்னார் மாவட்டத்தின் தென்கிழக்கு மூலையில் அனுராதபுரம், மன்னார் நிர்வாக எல்லைப் பகுதியைச் சார்ந்து அமைந்துள்ளது. வில்பத்து சரணாலயத்தின் வடபகுதியுடன் இணைந்ததான இப் பண்ணை 1959இல் சுமார் 6000 ஏக்கர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டது. 1972இல் பதவியிலிருந்த அரசானது மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தை ஏற்படுத்தி அதன் நிர்வாகத்தின்கீழ் இதனை ஒப்படைத்தது. இதனைவிட மடுரோட், விடத்தல்தீவு, தாராபுரம், எருக்கலம்பிட்டி பகுதியைச் சார்ந்தும் மரமுந்திரிகைச் செய்கை விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையின் மரமுந்திரிகைச் செய்கையில் மன்னார் மாவட்டம் சுமார் 70 ச. வீத பங்கினைப் பெறுகின்றது.

கொண்டச்சிப் பண்ணையானது புவியியல் ரீதியில் மன்னார் பிரதேசத்தைச் சார்ந்ததாக இருப்பினும் இப் பண்ணையுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் யாவும் அனுராதபுரத்துடன் தொடர்புடையதாகவே காணப்படுகின்றது. இதற்கென வசதியாக இப்பண்ணையில் இருந்து வில்பத்து சரணாலயம் ஊடாகப் பேய்மடுவுக்கும் அங்கிருந்து அனுராதபுரத்திற்கும் வீதி அமைக்கப்பட்டுள்ளது. இப்பண்ணையில் இருந்து அனுராதபுர எல்லையின் தூரம் ஆக 22கி.மீ. மட்டுமேயாகும். இப்பண்ணையின் பின்னணி நிலம் காடாக இருப்பதினாலும், தமிழர் குடியிருப்புக்கள் எதுவும் இல்லாதிருப்பதினாலும் இப்பண்ணையின் அபிவிருத்தி தொடர்பான வேலைகள் இரகசியமாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தன. இப்பண்ணை சூழவர முட்கம்பி வேலிகளால் அமைக்கப்பட்டதுடன் பிரதான வாயில்களில் இராணுவ சென்றிகளும் பண்ணையின் மத்தியில் ஒரு இராணுவ முகாமும் செயற்பட்டு வருகின்றது. ஆரம்ப காலங்களில் இப் பண்ணையில் சுமார் 300பேர் வேலைவாய்ப்பைப் பெற்றிருந்தனர் மன்னார் பிரதேசத்தின் விருத்தி கருதி மேற்கொள்ளப்பட்ட இப்பண்ணையில் ஆக 15 தமிழர் மட்டுமே வேலை வாய்ப்பைப் பெற்றிருந்தனர் மீதியானோரும் ஒரு பிரதான நிர்வாகிகளும் சிங்களவர்களாகவே காணப்பட்டனர். இவ் ஊழியர்களுக்கென விடுதிகள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு சகல சமூக சேவை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

இப் பண்ணையானது 6000 ஏக்கரில் அமைக்கப்பட்டு சுமார் 92,000 மரங்கள் நாட்டப்பட்டதினாலும் இதனை பராமரிப்பதற்கு வழியாக ஏழு தொகுதிகளாக பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு தொகுதிக்கும் விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

இப் பிரதான தொகுதிகளும் அவற்றின் விடுதிகள் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்படுகின்றன. குவேனி தொகுதி – 15, விஜயதொகுதி 25 அபய தொகுதி - 40 தம்பபண்ணி தொகுதி – 28 மகாசேன தொகுதி - 27 விக்கிரம தொகுதி – 35 பராக்கிரம- 45

தமிழ்ப் பகுதியில் அமைக்கப்பட்ட இப் பண்ணையின் ஒரு தொகுதியாவது தமிழ்ப் பெயரைக் கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இப் பண்ணையின் மையப் பகுதியில் இராணுவமுகாம் பாடசாலை (சிங்சள 50 மாணவர் - 3 ஆசிரியர்) 6 நீர்த்தாங்கிகள், கூட்டுறவு மொ. விற்பனை நிலையம், விளையாட்டுமைதானம், புத்த விகாரை – 1, நூலகம் – 1 களஞ்சியசாலை - 2, கராஜ் -1 ஆய்வு கூடம் - 1 போன்ற நிறுவனங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிடட தன்மைளை அவதானிக்கும்போது இப் பண்ணை விருத்தியின் பின்னணியில் ஆக்கிரமிப்பு நடவடிக்கையே மேற்கொள்ள படுகின்றது என்பது வெளிப்படையான உண்மையாகவுள்ளது.

**ஆனந்தன்**
**வங்காலை**

இப்பண்ணையின் இன்றைய நிலையை அவதானிக்கையில் தொழிற்பாடுகள் யாவும் மந்தகதியிலேயே நடைபெற்று வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. 1883ஜூலைக் கலவரத்தையடுத்து மடுரோட் என்ற சிங்கள கிராமத்தில் இருந்த சிங்களவர்கள் யாவரும் இடம் பெயரத் தொடங்கிவிட்டனர். இதனாலேயே மடுரோட் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மரமுந்திரிகை செய்கை முற்றாக கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. ஆயினும் கொண்டச்சிப்பண்ணையின் அமைவிடம் தொழிலாளர்களை இடம் பெயரச் செய்த போதிலும் இராணுவ பாதுகாப்புடன் தொடர்ந்தும் செயற்படுவதற்கு வாய்ப்பாக அமைந்தது. உற்பத்தி நடவடிக்கைகளில் விதை பொறுக்குதல் மட்டுமே இன்று நடைபெற்று வருகின்றது அதனுடன் தொடர்புடைய ஏனைய பதப்படுத்தல் நடவடிக்கை யாவும் கொழும்பில் நடைபெற்று வருகின்றது. இதற்கான போக்குவரத்து நடவடிக்கைகள் அநுராதபுரம் வீதியூடாக பாதுகாப்பாக நடைபெற்று வருகின்றது. இன்று ஆக 45 தொழிலாளர்கள் மட்டுமே காணப்படுகின்றனர். இதில் 8பேர் மட்டும் தமிழர்கள் ஆவர். நிலைமை சீரடைவதன் காரணமாக சிங்களத் தொழிலாளர்கள் வரக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. பிரச்சினைகள் தொடர்ந்து உக்கிரமடைந்த போதிலும் 1987 இல் 216 மெற்றிக் தொன் முந்திரிகைப் பருப்பும் 1988 இல் 87 மெற்றிக் தொன்னும், 1989 இல்150 மெற்றிக் தொன்னும் இப் பண்ணையின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டது. இதுவரையில் சுமார் 30 லட்சம் ரூபா தேறிய லாபமாக கிடைத்துள்ளதாக அறிக்கையொன்று கூறுகின்றது.

மரமுந்திரிகையின் மூலம் பழம், பழத்தில் இருந்து கஜூஜாம், கஜூவினாகிரி, கஜூபாணி, அற்ககோல் என்பன பெறப்படுகின்றது. செல்வந்தர்களின் உணவு எனப்படும்முந்திரிகைப்பருப்பு பிரதானமான ஏற்றுமதிப் பொருளாகவும் உள்ளது. இதனைவிட தண்டில் இருந்து பிசின், விறகு தேவையும் நிறைவு செய்யப்படுகிறது. ஒரு லட்சத்துக்கும் அதிகமான மரங்கள் இன்று இப்பண்ணைகளில் உள்ளன. ஒரு மரம் சராசரியாக 40 வருடங்கள் பயன் கொடுக்கும். ஒரு மரத்தில் இருந்து வருடம் 6 - 10 கிலோ கிராம் பருப்பு பெறப்படுகிறது.

இப்பண்ணை சுமார் 350 க்கும் அதிகமானோருக்கு வேலை வாய்ப்பை வழங்கக் கூடியதாக இருப்பதினாலும் உற்பத்திப்பொருட்களுக்கான நல்ல சந்தை வாய்ப்பு இருப்பதினாலும் இப் பண்ணையுடன் மேலும் இப் பிரதேசத்தின் ஏனைய பகுதிகளிலும் இப்பயிர்ச்செய்கையை விஸ்தரிக்கக்கூடிய வாய்ப்பும் காணப்படுவதினால் அமையவிருக்கின்ற வடக்கு கிழக்கு மாகாண அரசு இப்பண்ணை சார்ந்தும் கூடிய அக்கறை கொள்ள [illegible] அவசியமான[illegible]றாக காணப்படுகிறது.

கடந்தகாலங்களில் அரசாங் பண்ணை கைவிடப்பட்டமை போன்றன அரசியல் கலந்த அபிவிருத்தி நடவடிக்கைகளாக இருந்ததே காரணமாகும். இவ் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் சகல மட்டங்களிலும் பெரும்பான்மையினத்தவர்களுக்கே வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டன. காலப்போக்கில் இடம்பெற்ற அரசியல் பிரச்சினை காரணமாக ஊழியர்கள் இடம்பெயர்ந்தமையினால் அத்திட்டங்களும் கைவிடப்பட்ட நிலை இன்று உள்ளன. இப்பிரதேசத்தை சார்ந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருப்பின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பாதிப்படைந்திருக்காது.

எனவே கடந்தகால அனுபவங்களைக் கருத்திற் கொண்டு இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சகல அபிவிருத்திநடவடிக்கைகளும் இப்பிரதேசத்தில் தனித்துவம் பேணப்படத்தக்கதாக அமைய வேண்டும். அரசியல் சார்பற்ற தூய்மையான அபிவிருத்தி நடவடிக்கைகள் தோல்வியைத் தழுவாது என்பது எமது விறைப்பான உண்மையாகும்.

ஏற்கனவே பின்தங்கி கிடக்கின்ற மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திக்கெனஇனங் கண்டு கொள்ளப்பட்டுள்ள மரமுந்திரிகைச் செய்கையை மேலும் விஸ்தரிக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் அவசியமாகும். மடுறோட்டுப்பகுதியில் கைவிடப்பட்டுள்ள மரமுந்திரிகைப் பண்ணை மற்றும் விடத்தல் தீவு, எருக்கலம்பிட்டி ஆகிய பகுதிகளிலும் இப்பயிர்ச்செய்கை நிலத்தையும் பயன்பாட்டிற்கு கீழ் கொண்டு வருதல் அவசியமாகும். இதன் மூலம் இப்பிரதேசத்தில் பலபேருக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியும்.

## சண்டிலிப்பாயில் வீடமைப்புக்கடன் விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

பதினைந்து லட்சம் வீடமைப்பு திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பகுதிக்கு 15000 ரூபா வீடமைப்பு கடன் விண்ணப்பப் படிவங்கள் வழங்குவது இம்மாதம் 15ஆம் திகதியுடன் முடிவடையும் மீண்டும் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் இம்மாதம் 22ஆம்திகதிக்

## இளைஞர்கள் சுறுசுறுப்பாக இருப்பதற்கு

விற்றாலும் தங்களுக்கு இலாபமில்லை என்று பட்டியலே போட்டுக் காட்டியுள்ளனர்.

450 கிராம் பாண் தயாரிப்பதில் தமக்கு நெருக்கடி இருப்பதாக தெற்கில் உள்ள பேக்கரி உரிமையாளர்களும் அரசாங்கத்திற்குச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்கள். அமைச்சு அதுபற்றி ஆலோசித்து வருவதாகவும் மறுமொழி கூறியுள்ளது.

ஆனால் வடபகுதி பேக்கரி உரிமையாளர்கள் தான்தோன்றித்தனமாக 350 கிராம் பாண் போடுவதாக முடிவு எடுத்து அதற்கு நியாயமும் கற்பிக்கின்றார்கள். தெற்கிலும் வடக்கிலும் அவ்வாறு என்ன பெரிய அளவில் மூலப்பொருட்களில் விலை வீச்சு ஏற்பட்டுள்ளது.

தெற்குப்பகுதி பேக்கரிகளுக்கும் திருமலையில் உள்ள பிறிமா தொழிற்சாலையில் இருந்துதான் மா செல்கின்றது. திருமலையில் இருந்து மாத்தறை அம்பாந்தோட்டைக்கும் இடையில் உள்ள தூரத்தைவிட யாழ்ப்பாணத்திற்கு உள்ள தூரம் குறைவு. இதனால் மாவின் விலைக்கு தெற்கைவிட போக்குவரத்துச் செலவு கூடுதல் என்ற வாதத்தை வைக்க முடியாது. தெற்கில் உள்ளவர்களுக்கு அரச சலுகை இருப்பதாக சிலவேளை கூறலாம். ஆனால் அந்த விலை வீச்சு மூட்டைக்கு 5 ரூபா அளவில்தான் உண்டு. இவ் ஒரு இறாத்தல் பாண் விலையை வைத்துக்கொண்டு ஒரு பாணில் 100 கிராம் பாண் நிறையைக் குறைப்பதை எப்படி ஏற்றுக்கொள்வது.

450 கிராம் பாண் தயாரிக்கும்போது மூட்டையில் 210 இறாத்தல் பாண் தயாரிக்கலாம். 350 கிராம் தயாரிக்கும்போது ஒரு மூடையில் 270 இறாத்தல் பாண் தயாரிக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது 296 ரூபா ஒரு மூட்டைப் பாணில் கூடுதலாக பெறப்படுகின்றது.

விறகின் விலை, பாவிக்கப்படும் விறகின் அளவு, கூலியின் அளவு, மேசைக்குப் பாவிக்கப்படும் மாவின் அளவு போன்ற சகல விடயங்களிலும் செலவீடுகள் உயர்வாகவே காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு தனியாக ஒரு பேக்கரி உரிமையாளர் ஒரு மூட்டை மாவில் மட்டும் தொழில் புரிவதில்லை. பேக்கரி தொழில் மிக லாபம் கொடுக்கும். பணிஸ், கேக் போன்றவற்றிலும் தொழிலில் ஈடுபடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. மக்களின் நன்மை கருதி நட்டத்தில் தொழிற்படும் பேக்கரி உரிமையாளர்கள், அவற்றின் கணக்குகளையும் வெளியிட்டு வைக்கலாமே.

யாழ்ப்பாணத்திலுள்ள பேக்கரி உரிமையாளர்கள் சிலர் தங்களுக்குள் இருக்கும் வியாபாரப் போட்டியையும் மறந்து ஒன்றுசேர்ந்து தாமாகவே பாணின் நிறையைத் தீர்மானித்து அதை மக்களிடம் திணித்து வருகிறார்கள்.

அத்தியாவசிய உணவுப் பண்டத்தின் நிவறையையும் விலையையும் பேக்கரி உரிமையாளர்கள் சிலர் நிர்ணயித்துத் தன்னிச்சையாகச் செயல்படுத்தி வருகின்ற போதிலும் விலை தரக் கட்டுப்பாட்டதிகாரிகள் இன்னும் கண்ணை மூடிக்கொண்டிருப்பது கவலையளிப்பதாகும்.

பேக்கரி உரிமையாளர்கள் சிலரின் அயோக்கியத் தனமான இந்தச் செயலுக்கு மக்கள் நினைத்தால் தக்க பதில் கொடுக்க முடியும்!

பேக்கரி உரிமையாளர்கள் தமது தன்னிச்சையான முடிவை மாற்றிக்கொள்ளும்வரை நமது பாரம்பரிய குரக்கன், ஒடியல், மாவகைகளையும் சத்துள்ள இலைக்கஞ்சி வகைகளையும் பாணுக்குப் பதிலாக நமது உணவாகப் பழகிக்கொண்டால் போதுமே!

கொள்ளப்பட்டது. 1972இல் பதவியிலிருந்த அரசானது மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தை ஏற்படுத்தி அதன் நிர்வாகத்தின்கீழ் இதனை ஒப்படைத்தது. இதனைவிட மடுரோட், விடத்தல்தீவு, தாராபுரம், எருக்கலம்பிட்டி பகுதியைச் சார்ந்தும் மரமுந்திரிகைச் செய்கை விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையின் மரமுந்திரிகைச் செய்கையில் மன்னார் மாவட்டம் சுமார் 70 ச. வீத பங்கினைப் பெறுகின்றது.

கொண்டச்சிப் பண்ணையானது புவியியல் ரீதியில் மன்னார் பிரதேசத்தைச் ... யர்களுக்கென விடுதிகள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு சகல சமூக சேவை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

இப் பண்ணையானது 6000 ஏக்கரில் அமைக்கப்பட்டு சுமார் 92,000 மரங்கள் நாட்டப்பட்டதினாலும் இதனை பராமரிப்பதற்கு வழியாக ஏழு தொகுதிகளாக பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு தொகுதிக்கும் விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

இப் பிரதான தொகுதிகளும் அவற்றின் விடுதிகள் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்படுகின்றன. குவேனி தொகுதி – 15, விஜயதொகுதி ... கலவரத்தையடுத்து மடுரோட் என்ற சிங்கள கிராமத்தில் இருந்த சிங்களவர்கள் யாவரும் இடம் பெயரத் தொடங்கிவிட்டனர். இதனாலேயே மடுரோட் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மரமுந்திரிகை செய்கை முற்றாக கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. ஆயினும் கொண்டச்சிப்பண்ணையின் அமைவிடம் தொழிலாளர்களை இடம் பெயரச் செய்த போதிலும் இராணுவ பாதுகாப்புடன் தொடர்ந்தும் செயற்படுவதற்கு வாய்ப்பாக அமைந்தது. உற்பத்தி நடவடிக்கைகளில் விதை பொறுக்குதல் மட்டுமே இன்று நடைபெற்று ... பயன் கொடுக்கும். ஒரு மரத்தில் இருந்து வருடம் 6 - 10 கிலோ கிராம் பருப்பு பெறப்படுகிறது.

இப்பண்ணை சுமார் 350க்கும் அதிகமானோருக்கு வேலை வாய்ப்பை வழங்கக் கூடியதாக இருப்பதினாலும் உற்பத்திப்பொருட்களுக்கான நல்ல சந்தை வாய்ப்பு இருப்பதினாலும் இப் பண்ணையுடன் மேலும் இப் பிரதேசத்தின் ஏனைய பகுதிகளிலும் இப்பயிர்ச்செய்கையை விஸ்தரிக்கக்கூடிய வாய்ப்பும் காணப்படுவதினால் அமையவிருக்கின்ற வடக்கு கிழக்கு மாகாண அரசு இப்பண்ணை சார்ந்தும் கூடிய அக்கறை கொள்ள [illegible] அவசியமான [illegible]றாக காணப்படுகிறது.

கடந்தகாலங்களில் அரசாங்கம் இம்மாவட்டத்தில் மேற்கொண்ட பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகள் பல தோல்வியைத் தழுவியிருந்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும். குறிப்பாக பேசாலையில் அமைக்கப்பட்ட தகரத்தில் மீன் அடைக்கும்தொழிற்சாலை மூடப்பட்டமை மன்னார் துறைமுகஅபிவிருத்தி கைவிடப்பட்டமை, மடுரோட் மரமுந்திரிகைப் ... டிற்கு கீழ் கொண்டு வருதல் அவசியமாகும். இதன் மூலம் இப்பிரதேசத்தில் பலபேருக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியும்.

## சண்டிலிப்பாயில் வீடமைப்புக்கடன் விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

பதினைந்து லட்சம் வீடமைப்பு திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பகுதிக்கு 15000 ரூபா வீடமைப்பு கடன் விண்ணப்பப் படிவங்கள் வழங்குவது இம்மாதம் 15ஆம் திகதியுடன் முடிவடையும் மீண்டும் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் இம்மாதம் 22ஆம்திகதிக்குமுன் ஏற்றுக் கொள்ளப்படும் என மானிப்பாய் உதவி அரசாங்க அதிபர் தெரிவிக்கிறார்.

மேலும் அவர் ஐம்பது வயதிற்கு கீழ்ப்பட்ட வயதையுடைய குடும்பத் தலைவரை கொண்ட குடும்பங்களுக்கு இக் கடனுதவி வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். (லோ)

## இளைஞர்கள் சுறுசுறுப்பாக இருப்பதற்கு விளையாட்டு மைதானங்கள் அவசியம்

### - கிளிநொச்சி மேலதிக அரச அதிபர்

(கிளிநொச்சி)

சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றக் கூடிய அளவிற்கு எமது இளைஞர்கள் திறமைசாலிகளாக மாறவேண்டும். அதற்கான பயிற்சிகளை மேற்கொண்டு கிளிநொச்சி மாவட்டத்திற்கே பெருமையைத் தேடித்தர ஒவ்வொரு விளையாட்டு வீரனும் முன்வர வேண்டும்.

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய கிளிநொச்சிமாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டியில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இளைஞர்களின் உடல் உறுதியாக இருக்கவேண்டுமானால் ஒவ்வொரு இளைஞனும் விளையாட்டுகளில் ஈடுபட வேண்டும். விளையாட்டினால் உடல் மட்டுமன்றி உளவளர்ச்சியும் ஏற்பட வாய்ப்புஉண்டு.

இளைஞர்கள் சுறுசுறுப்பாகவும், விட்டுக்கொடுத்து பரந்த மனப்பான்மையுடன் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு சிறந்த களம் விளையாட்டு மைதானம்ஒன்றுதான் விளையாட்டு மைதானத்தில் கிடைக்கின்ற அனுபவம் வேறு எங்கும் கிடைக்கமாட்டாது.

வெல்பவர்கள் தோற்பதும், தோற்றவர்கள் வெல்வதும் அவரவர்கள் கெட்டித்தனத்தில் மட்டுமன்றி, விடாமுயற்சியில்தான் தங்கிஇருக்கிறது. ஆதலால் ஒவ்வொருவரும் தமது இலக்கை அடைய தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும் என்றார்.

விளையாட்டுஅமைச்சினால் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் 9கழகங்கள் பங்குபற்றின. இப் போட்டியில் பின்வரும் விளையாட்டுக் கழகங்கள் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றன.

பூநகரி சித்தன்குறிச்சி ஐக்கிய விளையாட்டுக்கழகம் 116 புள்ளிகள், நல்லூர் ஆலங்கேணி எவரெடி விளையாட்டுக் கழகம் 76 புள்ளிகள், தம்பிராய் அண்ணா விளையாட்டுக் கழகம் 66 புள்ளிகள்.

மேற்படி போட்டிகளனைத்தும் அத்தாய் அண்ணா விளையாட்டுத் திடலில் நடைபெற்றன. (49)

## மக்கள் மடல்

## 788 கீரிமலை பஸ் சேவை இடை நிறுத்தப்பட்டது ஏன்?

ஆசிரியர்
ஈழநாதம்.

788ஆம் இலக்க கீரிமலை யாழ்ப்பாணம் பஸ் சேவை திடீரென நிறுத்தப்பட்டுள்ளதால் இளவாலை, தொட்டிலடி, மாசியப்பிட்டி, விளான், சேந்தான்குளம் ஆகிய பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அலுவலக நேரங்களுக்கு செல்ல சீசன் டிக்கற் எடுத்தவர்களின் நலனுக்காக என்றாலும் காலையிலும் மாலையிலும் ஒரு பஸ் சேவையை இந்தப் பாதையூடாக நடாத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா.

சேந்தான்குளம். ம.ஜெயந்தி

## அதிகாரிகள் தமது தொழில் குறித்து சிந்தனையுடன் செயற்படவேண்டும்

(பண்டத்தரிப்பு)

அதிகாரிகள் தமது தொழில் தொடர்பான சகல சுற்று நிருபங்கள், அறிக்கைகள் கோவைகள் அனைத்தையும் தாமே வாசித்து தெளிந்த சிந்தனையுடன் செயற்பட வேண்டும்.

தாம் அறிந்திருக்கவேண்டியனவற்றை அறியாதிருப்பதும், லிகிதர்களுடன் ஆலோசித்து இது என்ன? அது என்ன? எதை எப்படி செய்ய வேண்டும், எனக் கேட்டு தெரிந்து செயற்படும் நிலையும், உள்ள அதிகாரிகளால், அந்தப்பதவிக்கு இழுக்கு.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்க சம்மேளனம் பிரெட்றிக் ஈபேட் மன்றம் இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் நான்கு நாள் கருத்தரங்கை தொடக்கி வைத்து உரையாற்றுகையில், கல்வி இராஜாங்க அமைச்சின் இணைப்புச்செயலாளர் திரு. பெ. சபாநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத்தலைவர் திரு. சோமசுந்தரம் தலைமையில் கருத்தரங்கு நடந்தது.

திரு சபாநாயகம் இலங்கையில் கல்வித்திணைக்களத்தின் தோற்றப் பாடசாலைகள், கல்வி நிர்வாக அதிகாரப் பரவலாக்கல் என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

ஐரோப்பியர் வர்த்தகர்களாக வந்து தமது மொழி, சமயத்தை புகுத்த முற்பட்டனர். எமது நாட்டை ஆள வழிப்பட்டனர். ஆங்கிலேயர் அதில் வெற்றி கண்டனர்.

ஆங்கிலேயர் தமது மொழியை தமது பெருந்தோட்ட செயற்பாடு, தமது அரசாங்க நிர்வாக இயந்திரத்தில் கடமை புரிய லிகிதர்களை தயாரிக்கும் கல்வியையே ஆரம்பத்தில் நடத்தினர்.

அதே வேளை தமது சமயத்தையும் புகுத்தினர்.

இலங்கையின் ஆட்சி இலங்கையர் கைக்கு வந்தபின் மேல் நாட்டு அபிவிருத்திக்கான கல்வி, கல்வி முறைக்கு வழி வகுக்கப்பட்டன.

இன்று கொழும்பில் இருந்த அதிகாரம் மாகாணசபைகட்கும், பகிர்ந்து நிர்வாகம் பரவலாக்கப்பட்டுள்ளது என இவ்வாறு கூறினார்.

பண்டத்தரிப்பு கோட்டத்தின் உதவிப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தம் கோட்டமட்டத்தின் செயற்பாடுகள் பற்றி விளக்கினார். (12)

## ஓமந்தைப் பகுதியில் கிராமசேவகர் குறைவு

(வவுனியா)

ஓமந்தைப் பகுதியில் உள்ள கிராமச்சேவையாளர் பிரிவுகளுக்கு, கிராமசேவையாளர் பற்றாக்குறை நிலவுகிறது.

இப்பகுதியில் உள்ள பாலமோட்டை, கொந்தைக்காரன் குளம், மருதமடு, ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு ஒரேயொரு கிராமச் சேவையாளரே பணிபுரிந்து வருகிறார்.

இதன் காரணமாக தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர் என்று புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இப்பகுதி மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஈழநாதம்

# மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர் ஏற்றுமதிச் சரக்கல்ல !

(கொழும்பு)

நாடு திரும்பவிருக்கும் இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பாக ஸ்ரீ லங்கா அரசு இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்த விருப்பம் தெரிவித்துள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், சுற்றுலா கிராமிய கைத்தொழில் அபிவிருத்திஅமைச்சருமான தொண்டமான் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இந்த விவகாரத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் ஸ்ரீ லங்கா அரசுக்குமிடையில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் தொண்டமான் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், இதுமனிதப் பிரச்சினை இதைப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தான் தீர்க்கவேண்டும் ஏற்றுமதிப் பண்டங்களையும், கப்பற் சரக்குகளையும் நாம் கையாளவில்லை. இது மனிதப் பிரச்சினை என்பதால் மனிதாபிமான அடிப்படையிலேதான் அணுகவேண்டும் என்றார்.

இந்தியாவுடனான பேச்சுவார்த்தை மிகவிரைவில்ஆரம்பமாகுமென்றும், 1,00,000 பேர் நாடு திரும்ப வேண்டுமென்ற நிலைக்குக் காரணம் ஸ்ரீமாவோ-சாஸ்திரி இந்திய இலங்கை ஒப்பந்தங்கள் என்றும், இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு புதிய சுற்றுவட்டப் பேச்சுக்கள் அவசியமானது என்றார் தொண்டமான்.

இப் பிரச்சினையை மனிதாபிமானத்துடன் தீர்க்க நாம் ஸ்ரீலங்கா அரசுடன் எனவே ஒரு உடன்பாட்டுக்கு வந்துள்ளோம். நாடு திரும்பவிருக்கும் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களை இலங்கைத் தோட்டத்தொழிலாளர் காங்கிரஸ் கவனிக்கும் - இவ்வாறு சௌக்கிய மூர்த்தி தொண்டமான் தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழில்த்துறை அமைச்சர் ரஞ்சன் விஜேரெட்ணா, இலங்கை. இந்திய கப்பற்சேவை சீர்குலைந்ததால் இந்திய கடவுச் சீட்டுக்களை வைத்திருக்கும் 1,00,000 தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்கு அனுப்ப முடியவில்லை. அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறாத பட்சத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்டதொழில்வாய்ப்புகள் மீளப்பெறப்படும் என்றும், ஸ்ரீலங்காவைச் சேர்ந்த தொழிலாளர் வேலை கோரிக் கதவுகளில் தட்டுகிறார்கள் என்று கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

தாய் நாடு திரும்பவிருக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் இலவச விமான பிரயாணச் சீட்டுக்களையும் வழங்க முன்வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இப் பிரச்சினை குறித்துப் புதிய பேச்சுவார்த்தைகள் பற்றித் தமக்குச் ஸ்ரீலங்கா அரசாங்கத்திடமிருந்து எவ்விதத்தகவலும் எட்டவில்லை என்று இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவை தொடர்பாக இந்திய அரசு ஆலோசித்து வருவதாக இந்தியத் தூதரக உதவித் தூதுவர் தெரிவித்தார்.

## பாணுக்குப் பதில் உள்ளூர் உணவு வகைகள்

(கொழும்பு)

பாணை உணவாகக் கொள்ளும் பழக்கத்தை மாற்றிக் கிழங்கு வகைகள், பயறு, கடலை போன்ற உணவுவகைகளை உட்கொள்ளுமாறு உணவு, கூட்டுறவு அமைச்சர் வீரசிங்ஹ மல்லிமாராய்ச்சி நேற்று முன்தினம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் பெருமளவு பணத்தைச் செலவு செய்கிறது பாணுக்குப் பதிலாக உள்ளூர் விளைபொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட தின்பண்டங்களை உண்ணப் பழகிக்கொள்ள வேண்டும் என்றார் அமைச்சர்.

மாவை இறக்குமதி செய்வதற்கு ஒதுக்கப்படும் மான்யம் அரசாங்கத்துக்கும் பெரிய சுமையாக இருப்பதால் அது நிறுத்தப்பட வேண்டும் என்றார்.

எமது நேற்றைய புதிய வெளியீடு!

ராஜசேகர் விஜயசாந்தி

'பட்டிக்காட்டு டாக்டரம்மா'

(ஒறிஜினல்)

குணம் வீடியோ சென்ரர்

## விதவைப் பெண்களுக்கு சுய தொழில் ஊக்குவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளின்போது குடும்பத்தலைவர்களை இழந்த பெண்களுக்கு சுய தொழில் முயற்சி ஊக்குவிப்பு திட்ட நடவடிக்கையாக முல்லை செஞ்சிலுவைச் சங்கம் பத்துப்பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது.

இதன்படி இவர்கள் தெற்கில் இருந்து வரும் 'திரிபோஷா' உணவு போல சோயா, அரிசி, உழுந்து, பயறு, எள்ளு என்பவற்றைக் கொண்டு நிறையுணவு தயாரிப்பில்ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் மூலம் வரும் லாபம் அவர்களுக்கே பகிர்ந்து அளிக்கப்பட்டுவருகிறது. மாதாந்தம் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை இவர்கள் இவ்வாறு பெற்றுக் கொள்ள முடிகிறது.

இந்தப் புதிய நிறையுணவு பைக்கற்றுக்களை தெல்லிப்பழை, நல்லூர், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், யாழ். செஞ்சிலுவைச் சங்கம் என்பன கொள்வனவு செய்து விற்பனை செய்து வருகின்றன.

நெல்லியடி, பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் இதனை வாங்குவதற்கு முன் வந்துள்ளன.

மேலும் தற்போது வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள சுகாதார நிலையங்கள், ஆஸ்பத்திரிகளில் வழங்கப்படும் திரிபோஷாவுக்கு பதிலாக இது வழங்கப்படலாம் என வைத்திய அதிகாரிகளும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதுவரை இப் பெண்களுக்கு ஏனைய நிவாரண உதவி நிறுவனங்கள் பணம் பொருள் உதவிகளையே செய்துள்ளன- ஆனால் முல்லைத்தீவு செஞ்சிலுவைச் சங்கமே இவர்களுக்கு சுயதொழில் திட்டத்தை செயற்படுத்தி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இரு உதவி அரச அதிபர் பிரிவில் இருந்து சிலர் நிவாரணம்

(காத்தான்குடி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாழைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஜனசக்தி உதவிகளைப் பெற்றுக்கொண்டிருக்கும்சிலர் வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் பல நிவாரண உதவிகளைப் பெற்று வருவதாக கச்சேரி வட்டாரத்திற்கு புகார் கிடைத்துள்ளது.

ஜனசக்தி உதவி மூலம் பயனடையும் சில குடும்பங்களுக்கு வாகரைப் பகுதியில் 4000 ரூபா புனர்வாழ்வு நிதியுதவி 15000 ரூபா வீட்டுத்திட்டம் மூலம் வீடுகள், உணவு முத்திரைகளையும் வழங்கியிருப்பது பற்றி தெரிவிக்கப்பட்ட இரகசிய முறைப்பாடுகளையடுத்து கச்சேரி வட்டாரத்தில் அந்தரங்க ஆய்வுகள் மேற்கொள்ளப் படுவதாகவும் அறியப்படுகிறது. (56)

## குடிநீர்ப்பிரச்சினை

கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியில் குடிதண்ணீர்பைப் ஒன்று தான் இருக்கிறபடியால் இங்குள்ள பொது மக்கள் குடிநீர் பெறுவதற்காக கியூவில் நிற்பதை காணமுடிகிறது.

இதனை யாழ். மாநகரசபை உடன்நடவடிக்கை எடுத்துஇப் பகுதி மக்களின் குடிநீர் வசதியைபூர்த்தி செய்யவேண்டும். என இப்பகுதிமக்கள் கேட்கின்றனர். (43)

### அம்பாறை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

### ஆசிரியர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் அன்று கல்வித்திணைக்

## காட்டுயானை அட்டகாசத்தை ஒழிக்க நடவடிக்கை

(காத்தான்குடி)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏறாவூர்ப் பற்று, மண்முனை தென்மேற்கு. கோறளை வடக்கு ஆகிய உதவி அரசாங்க அதிபர்களின் பிரிவுகளில் அதிகரித்து வருவதாகக் கூறப்படும் காட்டு யானைகளின் அட்டகாசங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. இரா. தியாகராஜா இத் தகவலை தெரிவித்தார்.

சமீபகாலமாக மேற்படி பிரதேச மக்கள் காட்டு யானைகளின் அட்டகாசம் குறித்து புகார்களைத் தெரிவித்து வருகின்றனர். இந்த யானைகளால்தமது உயிருக்கும், உடைமைக்கும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டிருப்பதனால் சிறு சேனைச் செய்கைகளில் ஆர்வத்துடன் ஈடுபட முடியாதிருப்பதாகவும் பலர் சுட்டிக்காட்டினர்.

இதையடுத்து வனவிலங்குத் திணைக்களத் தலைவருடன் தான் தொடர்பு கொண்டு யானைகளின் அட்டகாசத்தை ஒழிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார். (55)

## பனகளி மதவு திருத்தப்பட்டது

(கரவெட்டி)

நீண்ட காலமாக கவனிப்பாரற்றுக்கிடந்த பருத்தித்துறை சாவகச்சேரி வீதியிலுள்ள பனகளி மதவு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

87 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினராலும் தொடர்ந்து இந்தியப்படையினராலும் சேதமாக்கப்பட்ட மேற்படி மதவினால் வாகனகாரர்களும் பாதசாரிகளும் வெகுவாக கஸ்டப்பட்டு வந்தனர்.

இது தொடர்பாக ஈழநாதம் கடந்த வாரம் செய்திவெளியிட்டமையைத் தொடர்ந்து மேற்படி மதகு திருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (18)

## மன்னார் பிரதான பாலத்தின் படு மோசமான நிலை

(மன்னார்)

மன்னார்தீவை இணைக்கும் பிரதான பெரிய பாலம் மிகவும் பழுதடைந்து படுமோசமான நிலையில் காணப்படுகிறது இதன் பல பகுதிகள் துருப்பிடித்தும் சீமேந்து கல் உடைந்தும் காணப்படுகின்றன

போர்த்துக்கீசர் காலத்தில் கட்டப்பட்ட இந்த இரும்பு பாலம் பின்னர் ஆங்கிலேயரால் திருத்தியமைக்கப்பட்டது.

தள்ளாடியிலிருந்து கடலுக்குள்ளாகப் போடப்பட்ட வீதி மன்னார் கோட்டைக்கு அருகில் முடியுமிடத்தில் இந்தப் பாலம்அமைக்கப்பட்டுள்ளது.

கடல் மட்டத்திலிருந்து சுமார் பதினைந்து அடி உயரத்தில் இருக்கும் இந்தப்பாலத்தில் இருந்து எவராவது தவறிவீழ்ந்தால் உயிர்ஆபத்து உள்ளது

மன்னார் மாவட்டத்தில் உள்ள முருங்கன் நானாட்டான் சிலாவத்துறை வங்காலை திருக்கேஸ்வரம் மற்றும் பகுதிகளிலுள்ள மக்கள் தமது தேவைகளுக்காக மன்னாருக்கு தினமும் வந்து போகின்றனர் இந்தப்பாலத்தினூடாகவே இவர்கள் இங்கு வர வேண்டியுள்ளது

பின் தங்கியமன்னார் மாவட்டத்திற்கு இந்தப்பாலம் பழுதடைந்தால் கடல் வழியாகவே வரவேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது

### ஆளுநர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணுவத்தைப் பலப்படுத்த வேண்டிய அவசியமில்லை: எமது மண்ணில் இராணுவத்தைக் கொண்டுவந்து குவிக்க வேண்டிய அவசியமுமில்லை'' என்று திரு. யோகி மேலும் கூறினார்.

**சுற்றிவர சிங்கள இராணுவம் சிங்களக் குடியேற்றம்**

மேலும் அவர் பேசுகையில், நான் திருக்கோணமலையைப் பார்க்கின்றேன். சுற்றிவரசிங்கள இராணுவ முகாம்கள். அதில்கூட சிங்களக் குடியேற்றங்கள். சிங்கள இராணுவத்தினரா பொது மக்களைப் பாதுகாத்தது? சிங்களக்குடியேற்றத்தை நடாத்துவதற்கே இராணுவம் இங்கே இருக்கின்றது.

தடைசெய்யப்பட்ட தேக்கம் காட்டில் சிங்களவர்கள் குடியேற்றப் படுகின்றார்கள். கரும்பு வளர்ச்சிக்கென எடுக்

### விசர்-----

கோள் ஒன்றை விடுத்துள்ளார்.

கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் பெருமளவு பணத்தைச்

தற்கு ஒதுக்கப்படும் மான்யம் அரசாங்கத்துக்கும் பெரிய சுமையாக இருப்பதால் அது நிறுத்தப்பட வேண்டும் என்றார்.


எமது நேற்றைய புதிய வெளியீடு!

❋ ராஜசேகர் ❋ விஜயசாந்தி

'பட்டிக்காட்டு டாக்டரம்மா'

(ஒறிஜினல்)

# குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

B/693



**CLASSES FOR ACCOUNTANCY**

EXAM'S NOV - DEC - 1990

**C. I. M. A.**

STAGE I 19. 5. 1990

STAGE II 9. 6. 1990

AND

STAGE III 9. 6. 1990

**A. A. T. (London)**

PRELIM 19. 5. 1990

INTER AND 9. 6. 1990

FINALS 9. 6. 1990

**A. A. T. (Srilanka)**

STAGE I 19. 5. 1990

STAGE II AND July 1990

STAGE III July 1990

**I. A. B.**

FOUNDATION 19. 5. 1990

INTER AND 9. 6. 1990

FINALS 9. 6. 1990

AND

**I. D. P. M.**

PART I 19. 5. 1990

மேலதிக விபரங்களுக்கு

**NORTH CEYLON**

**TECHNICAL INSTITUTE**

(Result Oreiented Institute in North)

14, ST. PETER'S LANE

HOSPITAL ROAD,

JAFFNA

B/937



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 13-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


த்துறை அமைச்சர் ரஞ்சன் விஜேரெட்ணா, இலங்கை. இந்திய கப்பற்சேவை சீர்குலைந்ததால் இந்திய கடவுச்சீட்டுக்களை வைத்திருக்கும் 1,00,000 தோட்டத் தொழி

## குடிநீர்பிரச்சினை

கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியில் குடிதண்ணீர்பைப் ஒன்று தான் இருக்கிறபடியால் இங்குள்ள பொது மக்கள் குடிநீர் பெறுவதற்காக கியூவில் நிற்பதை காணமுடிகிறது.

இதனை யாழ்.மாநகரசபை உடன்நடவடிக்கை எடுத்துஇப் பகுதி மக்களின் குடிநீர் வசதியைபூர்த்தி செய்யவேண்டும். என இப்பகுதிமக்கள் கேட்கின்றனர். (43)

### அம்பாறை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உடை தரித்தவராய் சமுகமளிக்க வேண்டும்.

இந்நிலையங்களில் தெரிவு செய்யப்படும் கண்நோயாளிகள் இறுதியில் அம்பாறை ஆதார வைத்தியசாலையில் இலவச சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்படுவர் மூக்குக்கண்ணாடிக்கான பரிசோதனை நடத்தப்பட மாட்டாதென அறிவிக்கப் பட்டுள்ளது.

### சாரதி

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

பெருமளவிலான இந்த மோசடி பற்றி விசாரணையை மேற்கொள்ளும் நடவடிக்கைகளைத் திணைக்களம் முடுக்கிவிடப் போவதாகவாகனப் போக்கு வரத்து ஆணையாளர் திருமதி எச். எம். எஸ். கோட்டதெனியா தெரிவித்தார்.

போலியான சாரதி அனுமதிப் பத்திரங்கள் எல்லாம் ரத்துச் செய்யப்படும் என்றார் வாகனப் போக்கு வரத்து ஆணையாளர்.

கொழும்பு மாவட்டத்தில் 3, 00, 000 பேர் வாகன அனுமதிப் பத்திரம் வைத்துள்ளார்கள் இவர்களில்1,60,000 பேருக்கு இதுவரை புதிய சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளனவாம்

### கல்வி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்விப் பணிப்பாளர் என அழைக்கப்பட்டவர் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் என்றும், கோட்டக்கல்வி அதிகாரி என அழைக்கப்பட்டவர் மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் என்றும் இனிமேல் அழைக்கப்படுவார்கள்.

இதேபோல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் காரியாலயம் இனிமேல் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் காரியாலயம் என்றும், கோட்டக் கல்விக் காரியாலயம், உதவிக் கல்விப் பணிப்பாளர் காரியாலயம் என்றும் அழைக்கப்படும் என்றும் அச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (55)

தாரக உதவித் தூதுவர் தெரிவித்தார்.

வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# இரு உதவி அரச அதிபர் பிரிவில் இருந்து சிலர் நிவாரணம்

(காத்தான்குடி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாழைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஜனசக்தி உதவிகளைப் பெற்றுக்கொண்டிருக்கும்சிலர் வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் பல நிவாரண உதவிகளைப் பெற்று வருவதாக கச்சேரி வட்டாரத்திற்கு புகார் கிடைத்துள்ளது.

ஜனசக்தி உதவி மூலம் பயனடையும் சில குடும்பங்களுக்கு வாகரைப் பகுதியில் 4000 ரூபா புனர்வாழ்வு நிதியுதவி 15000 ரூபா வீட்டுத்திட்டம் மூலம் வீடுகள், உணவு முத்திரைகளையும் வழங்கியிருப்பது பற்றி தெரிவிக்கப் பட்ட இரகசிய முறைப்பாடுகளையடுத்து கச்சேரி வட்டாரத்தில் அந்தரங்க ஆய்வுகள் மேற்கொள்ளப் படுவதாகவும் அறியப்படுகிறது. (56)

### எமது மக்கள்...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

தவர் சடலங்களையும் காயப்பட்டவர்களையும் வைத்தியசாலைக்குக் கொண்டு வந்து சேர்த்தார். அது மாத்திரமன்றி இறந்தவர் சடலங்களை தனது வாகனத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் கூடக் கொண்டு சென்று கையளித்தார். மிகப்பயங்கரமானகாலகட்டத்தில் செல்வி ஜாக்குலின் சேவைகள் இப்பகுதிக்குக் கிடைத்தது இறைவன் அருள் தான் எனக் கூற வேண்டும்.

மேலும் அவர் பேசும்போது செல்வி ஜாக்குலினின் உயர்வான குண நலன்களையும், அவரின் உதவியால் மந்திகை ஆஸ்பத்திரிக்கு கிடைக்கப் பட்ட பண, பொருள் உதவிகள் பற்றியும், அதனால் ஆஸ்பத்திரி அடைந்த வளர்ச்சி பற்றியும் குறிப்பிட்டார்.

செல்வி.ஜாக்குலின்அவர்கள் தனது பதிலுரையில் நான் எனது கடமையைத் தான் செய்துள்ளேன் கடமையைச் சரியாகச் செய்ய வேண்டியதே எனது நோக்கமாகும் என அவர் தெரிவித்தார்,

இப் பாராட்டு விழாவின் ஆரம்பத்திலே செல்வி. ஜாக்குலினும் அவரது குழுவினரும் மாலைகள் அணிவிக்கப்பட்டு, விழா நடைபெறும் மண்டபம் வரை அழைத்து வரப்பட்டார்கள்.

இச் சேவை நலன் பாராட்டு விழாவிலே டாக்டர் எஸ். யோகேஸ்வரதேவன் ஆய்வுகூட உத்தியோகத்தர் திரு. எஸ். முருகேசு, ஓவசியர் ஏ. அருள்தாஸ், பதில் ஓவசியர் எஸ். அசேக்கியர், இலிகிதர் வி, எம். தேவராசா, தாதி எஸ். பரமசாமி, மருந்தாளர், திரு. எஸ். குமாரதாஸன் திரு. ஏ. இளங்கோ செல்வி. வடிவாம்பிகை, திரு. கே. பாலசுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றினர். இறுதியாக சங்கச் செயலாளர் ஐ, நாகமுத்து அவர்கள்நன்றியுரை வழங்கினார். (25)

### ஆசிரியர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் அன்று கல்வித்திணைக்களத்தை இயங்கவிடாமல் செய்யவுள்ளதாக இம் மறியல் போராட்டத்தை நடாத்தத் தீர்மானித்திருக்கும் ஏற்பாட்டாளர் ஒருவர் தெரிவித்தார். (தி)

### டிப்போ---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இ. போ, ச. சாலையினால் பல வருடகால தொலைபேசி கட்டணமாக ஐம்பத்தேழு ஆயிரத்து நானூறு ரூபா நிலுவை இருக்கிறது,

தலா ஐயாயிரம் ரூபா பெறுமதியான இரு காசோலைகள் இ. போ. ச. செலுத்தியதையடுத்து நிபந்தனை அடிப்படையில் தொலைபேசி வழங்கப்பட்டது.

### திருமண-:---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது.

மோட்டார் சைக்கிள் வீட்டுக் காரரால் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது. (21)

### புலிகளின்------

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசாரித்த பொழுது தெரிய வந்துள்ளது எனவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன், கடற்பகுதியில், இராமேஸ்வரம் பகுதி மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் துன்புறுத்தியதுடன் ஒப்பிடும் பொழுது, தமிழீழ விடுதலைப் புலிகள் செய்தது அவ்வாறொன்றும் பெரிதல்ல என்றும் அவர்கள் கூறினார்கள்.

### சூடடி----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கப் பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ளது. இது விவசாயிகளுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். (58)

எமது மண்ணில் இராணுவத்தைக் கொண்டுவந்து குவிக்க வேண்டிய அவசியமுமில்லை'' என்று திரு. யோகி மேலும் கூறினார்.

**சுற்றிவர**

**சிங்கள இராணுவம் சிங்களக் குடியேற்றம்**

மேலும் அவர் பேசுகையில், நான் திருக்கோணமலையைப் பார்க்கின்றேன். சுற்றிவரசிங்கள இராணுவ முகாம் கள். அதில்கூட சிங்களக் குடியேற்றங்கள். சிங்கள இராணுவத்தினரா பொது மக்களைப் பாதுகாத்தது? சிங் களக்குடியேற்றத்தை நடாத்துவதற்கே இராணுவம் இங்கே இருக்கின்றது.

தடைசெய்யப்பட்ட தேக்கம் காட்டில் சிங்களவர்கள் குடியேற்றப் படுகின்றார்கள். கரும்பு வளர்ச்சிக்கென எடுக்கப்பட்ட காணிகளில் சிங்களவர்கள் குடியேற்றப்படுகின்றார்கள். அந்தக் குளத்தினை அண்டி சிங்களவர்கள் குடியேற்றப்படுகின்றார்கள்.

வடக்கையும் கிழக்கையும் திருக்கோணமலையிலிருந்து மட்டக்களப்பையும் துண்டாடும் வண்ணம் சிங்களவர்கள் குடியேற்றப்படுகின்றார்கள்.

**தொன்மை மிக்க ஸ்தலம் திருக்கோணேஸ்வரம்**

திருக்கோணேஸ்வர ஆலயம் வரலாற்றுத்தொன்மைவாய்ந்தது. அந்த ஆலயத்தைக் கட்ட சிங்கள அகதிகள் என்ற பெயரில் சிங்கள ஆதிக்கம் நிலவுகின்றது. சிங்கள அரசு தலதா மாளிகையில் தமிழ் அகதிகளை இருக்க விடுமா?

திருக்கோணமலை ஆலயம் தமிழர்களின் வரலாற்றோடு சம்பந்தப்பட்ட ஆலயம் எனத் தெரிந்து கொண்டே அங்கு முன்னர் ஓர் புத்தர் சிலை கட்டப்பட்டுள்ளது இது எதற்காக? ஆனால் புத்தர் சிங்களவர் அல்ல.

**அகழ்வாராய்ச்சி நிரூபிக்கிறது**

அண்மையில் அனுராதபுரப் பகுதியில் நடந்த அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட சாதனங்கள் மகாவம்சத்தைப் பொய்யாக்கிவிட்டது. உண்மையான அகழ்வாராய்ச்சி நடைபெறுமானால் இந்நாடு முழுவதிலும் தமிழனே வாழ்ந்தான் என்பதும் விஜயன் வருவதற்கு முன்னரே இங்கு நாகரிகமிக்க சமுதாயம் வாழ்ந்திருக்கிறதென்பதும் நிரூபிக்கப்படும் என்றும் திரு. யோகி சொன்னார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள சிங்கள இராணுவப் படை முகாம்கள் குறைக்கப்பட வேண்டும். அரசு உண்மையான சமாதானத்தை விரும்புவதாக இருந்தால், இது குறித்து நடவடிக்கை எடுப்பதோடு, சிங்களப்படை இராணுவ முகாம்களின் எண்ணிக்கையைக் குறைத்தல் வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

கடல் மட்டத்திலிருந்து சுமார் பதினைந்து அடி உயரத்தில் இருக்கும் இந்தப்பாலத்தில் இருந்து எவராவது தவறிவீழ்ந்தால் உயிர்ஆபத்து உள்ளது

மன்னார் மாவட்டத்தில் உள்ள முருங்கன் நானாட்டான் சிலாவத்துறை வங்காலை திருக்கேஸ்வரம் மற்றும் பகுதிகளிலுள்ள மக்கள் தமது தேவைகளுக்காக மன்னாருக்கு தினமும் வந்து போகின்றனர் இந்தப்பாலத்தினூடாகவே இவர்கள் இங்கு வர வேண்டியுள்ளது

பின்தங்கியமன்னார் மாவட்டத்திற்கு இந்தப்பாலம் பழுதடைந்தால் கடல் வழியாகவே வரவேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது

### விசர்-----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி(

அருணாசலம் உதயச்சந்திரகலா (வயது 8 ) என்ற சிறுமி கடந்த வெள்ளிக்கிழமை இரவு வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வரப் பட்ட போது இறந்தார் (தி)


## மரண அறிவித்தல்

**திருமதி. அன்னலெட்சுமி விசுவலிங்கம்**

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 19 ஆம் இலக்கம் அத்தியடியில் தற்பொழுது வசித்தவருமாகிய அன்னலெட்சுமி விசுவலிங்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் விசுவலிங்கத்தின் அன்பு மனைவியும், ததீஸ்வரி, வளர்மதி, சுபீதா, சுசீந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13-5-90) பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக வண்ணை - கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

க. விசுவலிங்கம் (ஆசாரி)

R/471